விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 22 வியாழக்கிழமை (08.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4332)

## ஆயுதத்தை பயன்படுத்தாமல் இலங்கையில் சதிப்புரட்சி

### வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு சபாநாயகர் கடிதம்

(கொழும்பு)

ஆயுதங்களை பயன்படுத்தாமல் இலங்கையில் சதிப்புரட்சி அரங்கேறுவதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.



இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். 03

## தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்

### கூட்டமைப்பினரிடம் ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்களை பாதிக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதில் உடனடியாக கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு உறுதியளித்துள்ளார்.



ஜனாதிபதிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத் 24

# நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்?

### ஜனாதிபதி தீவிர சட்ட ஆலோசனை; கொழும்பு அரசியலில் உச்சக்கட்ட பரபரப்பு

(கொழும்பு) நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை உறுதிப்படுத்துவதில் மகிந்த - மைத்திரி தரப்புக்கு சவால்கள் ஏற்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தை உடனடியாக கலைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால் கொழும்பு அரசியலில் உச்சக்கட்ட பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச தலையீடே எமக்குத் தேவை

### மாவை சேனாதிராசா

(கொழும்பு)

இன்றைய சூழலில் சர்வதேச தலையீடே எமக்குத் தேவையாகவுள்ளது. இதற்கான சர்வதேசத்தின் வலுவான நாடுகளுடன் தொடர்புகளை மேற்கொண்டு எமது அடுத்த கட்ட நகர்வுகளை மேற் 24

## வடக்கு பகுதியில் கனமழை தொடரும்

### காற்றின் வேகமும் அதிகரிக்கும்

(கொழும்பு)

காற்றழுத்த தாழமுக்கம் இலங்கைக் கரையோரப் பகுதியை நெருங்கியுள்ளதால் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகும் என்று வானிலை ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர். 24

## நாடாளுமன்றை கூட்டாவிட்டால் இலங்கை மீதான சர்வதேச மதிப்பு குறையும்

### ஜனாதிபதிக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டும். மேலும் தாமதித்தால் இலங்கை மீதான சர்வதேசத்தின் மதிப்புக் குறைவடையும். இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர். ஹீதர் நுவேட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளதாவது.

நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு இலங்கை 24

### பாராளுமன்றம் கூட்டப்படும்போது

## ஜனாதிபதியின் விசேட உரை மாத்திரமே - லக்ஷ்மன் யாப்பா

(கொழும்பு)

ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தை கூட்ட சபாநாயகருக்கு எந்த அதிகாரமும் இல்லை. அத்துடன் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் விசேட உரையைத்தவிர வேறு எந்த விடயமும் இடம்பெறாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

பிரதமர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் 24

## பிரதேச செயலக ஊழியரின் விரலை கடித்தவர் கைது

(கரணவாய்)

பிரதேச செயலகத்தில் சிற்றூழியர் ஒருவரின் கை விரலை கடித்த நபர் ஒருவரை கைது செய்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். 24

## அரசியல் சூழ்நிலையை சுமுகநிலைக்கு கொண்டுவர ஜனாதிபதிக்கு ஒத்துழைக்கப்படும்

### எடுத்த முடிவுகளை மாற்ற முடியாது; ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

ஏற்கெனவே எடுத்த முடிவுகளை மாற்ற முடியாது என தெரிவித்த கூட்டமைப்பினர் நாட்டின் அரசியல் சூழ்நிலையை சுமுகநிலைக்கு கொண்டுவருவதற்காக எதிர் காலத்தில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை கொடுக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழுவினர் ஜனாதிபதிக்கு உறுதியளித்துள் 24

## பஸ் கட்டணம் 2 சதவீதத்தால் குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

தனியார் பேருந்து சேவைகளின் கட்டணம் 2 சதவீதத்தால் குறைக்கப்படுகிறது. இன்று நள்ளிரவு முதல் நடை முறைக்கு 24


## பாராளுமன்றம் கலைப்பு உண்மைக்கு புறம்பானது

### அரசாங்க தகவல் திணைக்களம்

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பாக தெரிவிக்கப்படும் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று இரவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 24

## கிளிநொச்சி அறிவியல் நகரில் வெடி பொருட்கள் மீட்பு



24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வியாழேந்திரனை மீண்டும் இணைத்து கொள்ளப் போவதில்லை – சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

வியாழேந்திரனை மீளவும் கட்சியில் இணைத்துக் கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்திலுள்ள அவரது வீட்டில் நேற்று (புதன்கிழமை) ஊடகங்களைச் சந்தித்து கருத்துத் தெரிவித்தபோதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கட்சி தாவி, தற்போது பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள வியாழேந்திரனை மீளவும் கட்சியில் இணைத்துக் கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பினூடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழேந்திரன் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

கடந்த மூன்று வருடங்களாக கூட்டமைப்பின் உறுப்பினராகச் செயற்பட்டு வந்த வியாழேந்திரன் அண்மையில கட்சி தாவி அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றிருக்கின்றார்.

இதற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ள கூட்டமைப்பு அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய அவரை கூட்டமைப்பிற்குள் கொண்டு வந்த புளொட் அமைப்பு அவரை தனது கட்சியிலிருந்து நீக்கி உள்ளதாகவும் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும் தமிழரசுக் கட்சியிடம் கோரியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)


## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னப்பு பத்மநாதன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மலர்வு 07.02.1944 மறைவு 31.10.2016

திதி: பிரதமை
08.11.2018

அப்பா நீங்கள் எம்மைப் பிரிந்து
ஈராண்டு சென்றாலும்
ஆறாது எம் கவலை – உங்கள்
நினைவுகள் என்றும் எம்மை
விட்டு அகலாது
என்றும் உங்கள் வழித்தடங்களை
பின்பற்றி எமது பயணங்கள்
தொடரும்

"மிதிலா"
கூவில்
புலோலி தென்மேற்கு, புலோலி.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(6371)



## துயர் பகிர்கின்றோம்



யா/தாவடி இந்து த.க.
பாடசாலையின் ஆசிரியர்
திரு.இ. ஐங்கரனின்
அன்புத் தந்தையார்

அமரர்
**கந்தையா இராசா**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை

(6366)



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சிரேஷ்ட
ஆசிரியை திருமதி ஆனந்தவனிதை
செங்கதிர்ச்செல்வன்
அவர்களின் அன்புக் கணவர்

**பொன்னையா**
**செங்கதிர்ச்செல்வன்**

அவர்கள் இறைபதம்
அடைந்ததையிட்டு மிகுந்த
துயரடைகின்றோம். இவரது
பிரிவால் துயருற்றிருக்கும்
இவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்து நிற்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி



## மரண அறிவித்தல்



**மாணிக்கவாசகர்**
**மணிவேந்தன்**

பிறப்பு 28.03.1985 இறப்பு 06.11.2018

வதிரி, புலவராவோடையை பிறப்பிடமாகவும் அல்வாய் கிழக்கு வெள்ளிருவையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் மணிவேந்தன் 06.11.2018 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் மாணிக்கவாசகர்-இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புப் புதல்வனும் மாணிக்கராசா-சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும் சசிதாவின் அன்புக் கணவரும் கவினின் பாசமிகு தந்தையும் கார்த்திகா, சத்தியேந்திரா, யோகேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுமார், துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிகர்ஷிகா, சஸ்வின், சஸ்விந் ஆகியோரின் அன்பு மாமனாரும் தேவராசா, தங்கம்மா, மகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் தவமணிதேவி, கனகரத்தினம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4363)

பெரியதோட்டம், புலவராவோடை,
வதிரி, கரவெட்டி.

தகவல்:-
சி.மாணிக்கவாசகர் (தகப்பன்)
021 226 3919

# ஆயுதங்களைப் பயன்படுத்தாத சதிப்புரட்சியே இலங்கையில் அரங்கேறுகிறது -சபாநாயகர்

**(கொழும்பு)**

**இலங்கையில் தற்போது ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் சதிப்புரட்சியே அரங்கேற்றப்பட்டு வருவதாக சர்வதேசத்துக்கு சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.**



இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள இராஜதந்திரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளதாக றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

"இலங்கை அரசில் கடந்த ஒருவார காலமாக சதிப்புரட்சியே இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு ஜனநாயகத்துக்கு முரணாக தற்போது நடைபெறும் அரசியல் செயற்பாடுகள் முன்கூட்டியே திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் மைத்திரிபால சிறிசேன வெளிப்படைத்தன்மை, ஒழுக்கம், நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்துக்கு ஜனாதிபதி முரணாக செயற்பட்டு வருகின்றார்.

மேலும் நல்லாட்சியில் நிலைநிறுத்துவதாக கூறிய அனைத்து விடய ங்களுக்கும் ஜனாதிபதி முரணாக செயற்பட்டு வருகின்றார்.

அதாவது ஆயுதங்களை பயன்படுத்தாமல் சதிப்புரட்சியில் ஜனாதிபதி மற்றும் புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டு வருகின்றனர்" என கருஜெயசூரிய அக்கடிதத்தில் கூறியுள்ளதாக றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## ஜனநாயகத்திற்கு எதிராக நடைபெறும் செயலுக்கு நாம் ஆதரவளிக்க முடியாது

### இராதாகிருஸ்ணன் உறுதி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எங்களை அமைச்சு பொறுப்புகளை பெற்றுக்கொண்டு எங்களுடன் இணைந்து செயற்படுங்கள் அல்லது பாராளுமன்றத்தில் இடம்பெற உள்ள வாக்களிப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி நடு நிலைமை வகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்த போதே இந்த கருத்தை தெரிவித்துள்ளதாக இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் முற்போக்குக் கூட்டணியை சந்திக்க வேண்டுமென்ற வேண்டுகோளுக்கிணங்க நாங்கள் அவரை சந்தித்தோம். இதன் போது இன்றைய அரசியல் நிலைமை தொடர்பாக மிகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினர்களிடம் எங்களை அமைச்சு பொறுப்புகளை பெற்றுக் கொண்டுஎங்களுடன்இணைந்து செயற்படுங்கள் அல்லது எதிர்வரும் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வாக்களிக்கின்ற சந்தர்ப்பத்திலே தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது நடுநிலைமை வகிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை எங்களிடம் விடுத்திருந்தார்.

ஆனால் நாங்கள் அவரிடம் தெளிவாக தெரிவித்திருந்தோம். இந்த நாட்டிலே ஜனநாயகத்திற்கு விரோதமாக அல்லது ஜனநாயகத்தை பழுதடைய செய்வதான விடயங்களுக்கு அல்லது ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழந்து தனிப்பட்டவர்கள் எடுக்கும் முயற்சிக்கு எந்த ஒரு காரணம்கொண்டும்சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கட்சி என்ற வகையில் தமிழ் முற்போக்கு கூட்டணி அதற்கு எந்த வகையிலும் ஒத்துழைப்பு வழங்காது.

எனவே நாங்கள் அந்த வாக்களிப்பின்போது ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடுகளுக்கு எதிராக வாக்களிக்க இருக்கின்றோம்என்பதை ஜனாதிபதியிடம் தெளிவாக தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியை பொறுத்த வரையிலே எங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த இரண்டு கட்சிகளுமே எந்த கட்சி நாட்டை ஆட்சி செய்தாலும் நாங்கள் அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில்எங்களு டைய மக்களுக்குஎவ்வாறான சேவைகளை செய்ய வேண்டுமோ அதற்கு ஏற்ப முடிவெடுத்து நாங்கள் எங்களுடைய மக்களுக்கு என்னென்ன சேவைகளை முன்னெடுக்க முடியுமோ அதனை முன்னெடுப்போம்.

ஆனால் ஜனநாயகத்தை பாதிப்புக்கு உள்ளாக்கும் வகையில் அல்லது ஜனநாயகத்தை மதிக்காமல் செயற்படுகின்ற செயற்பாடுகளுக்கு எந்த ஒரு கட்சியாக இருந்தாலும் அவர்களுக்கு நாங்கள் ஒரு நாளும் துணை போக முடியாது.

தமிழ் முற்போக்கு கூட்டணியை பொறுத்தளவில் நாங்கள்சிறுபான்மைமக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றவர்கள். சிறுபான்மை மக்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டே இந்த அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் வாக்களித்தார்கள்.

ஆனால் அந்த ஜனநாயகம் இப்பொழுது கேள்விக்குறியாக மாறியிருக்கின்றது. அதற்கு காரணம் ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானங்கள். எனவே இந்த தீர்மானத்தை அவர் எப்படி எடுத்தார் என்பது எங்களுக்கு தெரியவில்லை. காரணம் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் கொண்ட ஒரு அரசாங்கம் அமையும் எனவும் அந்த அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் நாட்டில் இருக்கின்ற வடகிழக்கு தமிழர் பிரச்சினைகள் உட்பட மலையக மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் எனவும் அதற்காகவே அன்று நாங்கள் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தோம் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். எனவே எங்களுக்கு வாக்களித்த மக்கள் அதனையே எதிர்பார்த்தார்கள்.

இன்றைய சூழ்நிலையில் நிலைமை முழுமையாக மாற்றம் அடைந்திருக்கிறது. உங்களுக்கு வாக்களித்த மக்களின் எண்ணத்திற்கு மாறாக ஜனநாயக விரோத செயற்பாடாக இன்று பல செயற்பாடுகள் அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படுகிறது. எனவே இதனை எந்த வகையிலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. நாளை புதிதாக ஜனநாயக ரீதியாக ஒரு பிரதமர் தெரிவு செய்யப்பட்டாலும் அவருக்கு இந்த நிலைமை ஏற்படக் கூடாது என்பதற்காகவே நாங்கள் இந்த செயற்பாட்டிற்கு விரோதமாக வாக்களிக்க தீர்மானித்திருக்கின்றோம்.

எத்தனை குற்றங்கள் இருந்தாலும் அவருக்கு எதிராக ஜயநாயக ரீதியில் செயற்பட வேண்டுமே தவிர இப்படி செயற்படுவதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதியிடம் ஊடக அமைச்சு



(கொழும்பு)

ஊடகத்துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்கள் உள்ளிட்ட விடயதான விவகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கட்டுப்பாட்டிலுள்ளதாக அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் கீழ், ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய அமைச்சுகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ள போதிலும் அவரது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய நிறுவனங்களின் எண்ணிக்கை குறைவடையவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல்திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## அரசியல் நெருக்கடியால் பொருளாதாரம் பாதிப்பு

### கருணாநாயக்க கவலை

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமையால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி பெற்ற வெற்றி மீறப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி அலரிமாளிகையில் நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு சர்வாதிகார ஆட்சியை அகற்ற முயன்ற பொதுமக்கள் மறுபடியும் ஒரு சர்வாதிகார ஆட்சியைப் பார்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த நடவடிக்கை காரணமாக அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமையால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், உலக வங்கி கூட ஜப்பான் மற்றும் அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட மானியங்களையும் திரும்பப் பெற்றுள்ளது என்றும் தெரிவித்தார். (இ-7)

## கோத்தாவின் வாகனம் விபத்து

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் அவரது மனைவியும் பயணித்த ஜீப் வண்டி நேற்றுக்காலை ஹக்மன - தெனகம பிரதேசத்தில் வைத்து டிரக்டர் வண்டியுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில், டிரக்டர் வண்டியின் சாரதி காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும், இந்த விபத்தில், கோத்தபாய ராஜபக்ஷவுக்கோ அவரது மனைவி அனோமா ராஜபக்ஷவுக்கோ எவ்வித ஆபத்தும் நேரவில்லையென ஹக்மன பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## ஜனாதிபதிக்கு ஆதரவாக 117 எம்.பிக்கள் உள்ளனர்

### அமைச்சரவை பேச்சாளர் தகவல்



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தற்பொழுது பெரும்பான்மையை அரச கட்சி கொண்டிருப்பதாகவும் அதன் எண்ணிக்கை 117 ஆகும்என்றும்அமைச்சரும் ஊடகப்பேச்சாளருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமக்கே பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதாகத் தெரிவித்திருப்பது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மற்றுமொரு ஊடகப்பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

## முன்னாள் பிரதமர், அமைச்சர்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்க முடியாது

### பொலிஸ்மா அதிபர் பூஜித தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு அதிகாரிகளை முன்னர் இருந்த அளவுக்கு அதிகரிக்க முடியாது என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் அளவை அதிகரிக்குமாறு முன்னாள் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்கு பதில் வழங்கும் வகையிலேயே பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2019ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக் கடைகள் என்பனவற்றை 2019.01.01ஆம் திகதி தொடக்கம் 2019.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | - 08.11.2018 - 19.11.2018 பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி | - 21.11.2018 பி.ப 1.30 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | - 21.11.2018 பி.ப 2.00 மணிக்கு |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | - வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம். |

| தொ. இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத் திரத் தொகை (VAT, NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள் எக் கூடிய ஆகக் குறைந்த கேள் வித் தொகை (VAT, NBT தவிர) | மாத வாடகை (VAT, NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை. (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,027,100.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 189,000.00 | |
| 3 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 41,685.00 | 250.00 |
| 4 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 52,132.50 | 250.00 |
| 5 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 38,640.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 22,706,250.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 47,500.00 | |
| 3 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 65,625.00 | |
| 4 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 275,660.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 257,422.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 42,750.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2018.10.17ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

க.தர்ஷன்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
08.11.2018

(C-4362)

# இங்கிலாந்து ஆதிக்கம்



காலி டெஸ்டில் இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் அசத்த, முதல் இன்னிங்சில் இலங்கை அணி 203 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இலங்கை, இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் காலியில் நடக்கிறது. முதல் நாள் முடிவில் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 321 ஓட்டங்கள் எடுத்திருந்தது. போக்ஸ் (87), லீச் (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை தொடர்ந்த இங்கிலாந்து அணியின் ஜாக் லீச் (15), டில்ருவான் பெரேரா 'வேகத்தில்' வெளியேறினார். அபாரமாக ஆடிய அறிமுக விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் பென் போக்ஸ் சதம் கடந்தார். இவர், 107 ஓட்டங்கள் எடுத்து சுரங்க லக்மல் பந்தில் ஆட்டமிழந்தார் இதன்மூலம் அறிமுக டெஸ்டில் சதமடித்த 20ஆவது இங்கிலாந்து வீரரானார்.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 342 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் டில்ருவான் பெரேரா 5, லக்மல் 3 விக்கெட் கைப்பற்றினர்.

**மொயீன் அசத்தல்**

பின் முதல் இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணிக்கு கருணாரத்ன (4), குஷல் சில்வா (1) ஏமாற்றினர். அடுத்து வந்த குசல் மெண்டிஸ் (19), தனஞ்செய டி சில்வா (14) நிலைக்கவில்லை. அணித் தலைவர் சண்டிமல் (33) பெரிய அளவில் சோபிக்கவில்லை. பொறுப்பாக ஆடிய மத்யூஸ் (52) அரைச் சதமடித்தார். மொயீன அலி 'சுழலில்' டிக்வெல (28), அகிலா தனஞ்செய (0) சிக்கினர். டில்ருவான் பெரேரா (21), சுரங்க லக்மல் (15) கைகொடுக்கவில்லை.

முதல் இன்னிங்சில் இலங்கை அணி 203 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. ஹெரத் (14) ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து சார்பில் மொயீன் அலி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, நேற்றைய 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழபபின்றி 38 ஓட்டங்களை எடுத திருந்தது.



பேர்ன்ஸ் (11), ஜெனனிங்ஸ் (26) ஆட்டமிழக்காமல் இருந்தனர். 10 விக்கெட் கைவசம் உள்ள நிலையில் இங்கிலாந்து 177 ஓட்டங்கள் முன்னிலையுடன் உள்ளது.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# சேவைநலன் பாராட்டு



**திருமதி**
**செல்வமணி செல்லத்துரை**
*(SLTS I)*

23.03.2000 தொடக்கம்
2 7.06.2010 வரையும்,
24.02.2012 தொடக்கம்
07.11.2018 வரையும் எமது
பாடசாலையில் சங்கீத ஆசிரியையாக
கடமையாற்றி தனது ஆசிரிய
சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்ற
செல்வமணி ஆசிரியையை பாராட்டி
வாழ்த்துவதோடு அவரது ஓய்வுக்காலம்
சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்,**
**அச்சுவேலி.**

Best Wishes

(C-4360)



# மணிவிழா வாழ்த்து



**திருமதி**
**ஜெகதீஸ்வரி தேவராஜா** *(SLTS I)*
**(பகுதித் தலைவர்)**

Best Wishes

(6372)

ஆசிரியப் பணியில் அரும்பெரும் சேவையாற்றி இன்று மணிவிழாக் காணும் எமதன்புக்குரிய ஆசிரியை திருமதி ஜெகதீஸ்வரி தேவராஜா அவர்கள் என்றும் சீருடனும் சிறப்புடனும் மங்கலமாய் வாழியவே

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் கழகம்,**
**யா/கோண்டாவில் சி.சி.தமிழ் கலவன் பாடசாலை**

2018.11.08

# மரண அறிவித்தல்

## சின்னப்பு இராசரத்தினம்



கோண்டாவில் கிழக்கை பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட பிரபல கட்டட ஒப்பந் தகாரரும் தமிழறிஞருமான சின்னப்பு இராசரத்தினம் அவர்கள் 07.11.2018 அன்று காலமாகிவிட்டார். அன்னார் குண மணி அவர்களின் அன்புக் கணவரும், சசிகலா (ஆசிரியை, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்), நிர்மலா (ஆசிரியை, மட்/ஊரணி சரஸ்வதி வித்தி யாலயம்), தயாவதி, தயாபரன் (போலந்து), கதீஸ்வரன் (கட்டட ஒப்பந்தகாரர்), சோதரன் (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தி யசாலை தெல்லிப்பழை), சுதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் சங்கானை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தர்மராஜா (தாதிய பரிபாலகர், ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி), ரவிச்சந்திரன் (ஆசிரியர், மட்/திருப்பெருந்துறை ஸ்ரீ முருகன் வித்தி யாலயம்), தேவ மயூரன் (மதுவரி திணைக்கள உத்தியோகத்தர் சுன்னாகம்), காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வடமாகாண சபை), மதிரூபன் (ஆசிரியர், ஏழாலை புனித இசிதோர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லக்ஷிகா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஜன்ஷிகா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஸ்ரீராம் (யாழ்.இந்துக் கல்லூரி), கஜபூஷணி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), அஜஆரணி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), லகுஞ்சரன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), கம்ஷிகா (திருக்குடும்ப கன்னியர்மடம், மட்டக்களப்பு), திபிசன் (மெதடிஸ்ட் மத்திய கல்லூரி மட்டக்களப்பு), பிரஷ்ணவி (யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை), சோபினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (08.11.2018) முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்
077 934 6344

(6355)

# அடிப்படை தேவைகள் குறித்து அவதானம் செலுத்தவில்லை

### தமிழ் அரசியல்வாதிகள் மீது முரளிதரன் விசனம்



(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பிலும், கடந்த காலங்கள் தொடர்பிலும் விவாதிக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள், மக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்து அவதானம் செலுத்துவதில்லை என்று இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் மூன்று வேளை உணவையும் தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியையுமே எதிர்பார்க்கின்றனர். ஆனால் இந்த கோரிக்கை தொடர்பில் வடக்கு, தெற்கு என்று எந்த பகுதியிலுள்ள அரசியல்வாதிகளும் அவதானம் செலுத்துவதில்லை.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து அவதானம் செலுத்தாமல் ஜனநாயகம், மனித உரிமை போன்ற விடயங்கள் குறித்து வாதிடுவதால் என்ன நன்மை ஏற்படும் என்று தமக்குப் புரியவில்லை என்றும் முத்தையா முரளிதரன் தெரிவித்தார். (இ-7)

# 45-ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 25.09.2018 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர். S.P. மகாலிங்கம்



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 08.11.2018 இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து உடனடியாக நேரில் வந்து ஆறுதல் தெரிவித்து இறுதி நிகழ்வுகளில் பங்குகொண்ட நல்லுள்ளங்களுக்கும் பல்வேறு இடங்களிலிருந்தும் தொலைபேசி, முகப்புத்தகம், ஈமெயில் போன்றவற்றினூடாகவும் அனுதாபத்தினை தெரிவித்த பாசமிகு உறவுகளுக்கும் பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் மலர் வலயங்கள், மாலைகளினூடாக அஞ்சலித்த உறவுகளுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அன்பான உறவுகள் யாவருக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(6361)

182, பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு, மடத்தடி.

குடும்பத்தினர்:
077 724 3324

# இராசி பலன்

**08.11.2018**
ஐப்பசி 22, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
பிரதமை முன்னிரவு 10.06 மணிவரை
விசாகம் முன்னிரவு 9.11 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
கந்த சஷ்டி விரதாரம்பம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, பரணி<br>மாலை 5.00 மணிக்கு<br>விருச்-சந் | | |
| சனி | குரு.புத | சூரி. சுக்<br>சந் | |

**மீனம்** அதிகாரிகளை விமர்சிப்பதை தவிப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, கொடுக்கல்- வாங்கல்களில் மனஸ்தாபம் ஏற்படலாம்.

**மேடம்** விருப்பங்கள் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**மிதுனம்** வியாபார நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்** ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படலாம், நண்பர்கள் பக்க பலமாக இருப்பர், பயணங்கள் கைகூடும்.

**கடகம்** மனதில் நீண்டநாளாக இருந்த பாரம் குறையும், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வாகன யோகத்தால் வளம் காணும் நாள்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு.

**சிம்மம்** நண்பர்கள் சொல்லும் யோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த முயற்சிக்கு கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** நண்பர்கள் பக்கபலமாக ஒத்துழைப்பு வழங்குவர், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும் பணப்பிரச்சினைகள் தீரும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், விவாதங்களை தவிப்பது நல்லது, இன்பங்கள் இல்லம் வந்து சேரும் நாள், திறமை மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த வேண்டும்

## பிரிட்டன் அரசிற்கு நாடுகடந்த தமிழீழ அரசு அழுத்தம்



(லண்டன்)

**இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவதற்கு எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. கூட்டத்தொடரில் பரிந்துரை செய்யக்கோரி பிரித்தானிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் செயற்பாடுகளை மீண்டும் நாடுகடந்த தமிழீழ அரசு ஆரம்பித்துள்ளது.**

அந்த வகையில் நாடு கடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணன் மற்றும் விளையாட்டு மற்றும் சமூகநலன் பேணும் பிரதியமைச்சர் சொ.யோகலிங்கத்தினுடைய நெறிப்படுத்தலில் மனித உரிமை செயற்பாட்டாளரான பொன்ராசா புவலோஜன் தலைமையிலான குழுவினர் அண்மையில் **Dagenham and Rainham** தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் **Jon Cruddas** வுடன் பிரித்தானிய பாராளுமன்ற வளாகத்தினுள் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் கொண்டுவரப்பட்ட 30/1, 34/1 தீர்மானங்களை எந்தளவிற்கு இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளது என்பது பற்றி ஆராயப்பட்டு அது தொடர்பான இலங்கையின் நீதிப் பொறிமுறைகளை கண்காணிக்கும் பொறுப்புடமைக்கான சர்வதேச நிபுணர் குழுவின் (**Sri Lanka Monitoring and Accountability Panel**) அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு (**international criminal court**) எதற்காக பரிந்துரைக்க வேண்டும் என்பது பற்றிய மனுவும் கையளிக்கப்பட்டது.

அத்துடன் தற்போது தமிழர் தாயக பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், நீண்ட நாட்களாக எந்த வித விசாரணையும் இன்றி சிறைகளில் வதைபட்டுக் கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் அண்மையில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் சொக்கலிங்கம் யோகலிங்கம் மற்றும் செயற்பாட்டாளர்கள் தொடர்பாக பிரித்தானிய பொலிஸாரின் செயற்பாடுகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டதுடன் இதற்கு தீர்வு காணவும் வலியுறுத்தப்பட்டது.

குறித்த மனுவில் பாராளுமன்ற உறுப்பினர் கையொப்பமிட்டு ஆதரவு தெரிவித்ததுடன் இவ் விடயம் தொடர்பாக பாராளுமன்ற விவாதம் வரும் பட்சத்தில் கேள்விகளை முன்வைப்பதாகவும் உறுதியளித்திருந்தார். (இ-9)

# நெடுந்தீவில் கடலரிப்பு அதிகரிப்பு! தடுப்பணைகள் அமைக்க கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவு கிழக்கு கரையோரப்பகுதிகள் வெகுவாக கடலரிப்புக்கு உள்ளாகி வருவதனால் கரையோர வீதிகள், குடியிருப்புக்கள் பாதிக்கப்படுவதாக கரையோர மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நெடுந்தீவு பிரதேசத்தின் கிழக்கு கரையோரப் பகுதிகள் மிக வேகமாக கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றன.

இதனால் கரையோர வீதி முழுமையாக சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதுடன், வழிபாட்டு இடங்களும் கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது.

தற்போது பிடாரி அம்மன் கோயில் முதல் காளவாய் முனை வரைக்குமான பகுதிகள் இவ்வாறு கடலரிப்புக்கு உள்ளாகி வருவதாவும் இதனால் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்வதாகவும் இவ்வாறு அரிப்புக்குள்ளாகும் பகுதிகளில கடற்றொழில் உபகரணங்களையும் மீன்பிடி வள்ளங்களையும் பாதுகாப்பதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இப்பகுதிகளுக்கு கடலரிப்பு தடுப்பு அணைகளை அமைக்க வேண்டும் எனவும் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-315)

## அம்பாள் ஆலய பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பொதுக்கூட்டம் நாளை 9 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெறும். 2019 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஆலய புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் நடைபெறயிருப்பது தொடர்பாகவும் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும். (இ

## கந்தசஷ்டி திருவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு குருநாத சுவாமி கோவில் கந்த சஷ்டி திருவிழா இன்று 8 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 14 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறும். இதில் தினமும் கந்தபுராண படனம் இடம்பெறும். 13 ஆம் திகதி மாலை சூரசம்காரம் நடைபெறும். (இ

## பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளைக் காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் இணைச் செயலாளர் க.செவ்வேள், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ் அன்ரன், யாழ்ப்பாணக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி க.சோதிதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (இ

## 'இந்து சாதனம்' இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவ பரிபாலன சபையின் வெளியீடான "இந்து சாதனம்" ஐப்பசி-கார்த்திகை இதழ் வெளிவந்துள்ளது. (இ



**தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மிருசுவில் 52 ஆவது படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி -கச்சாய் வீதி வீரபத்திரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை விசேட பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந் நிகழ்வில் 52ஆவது படைத் தலைமையக பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் லக்ஸ்ரீறி வடுகே, 523 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் திலக் வீரக்கோன் மற்றும் இராணுவத்தினர் கலந்து கொண்டனர்.** (படங்கள்:-சுபேசன்)

## துவிச்சக்கர வண்டி வழங்கல்




(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினால் யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலய உயர்தர கலைப்பிரிவு மாணவன் த.தயோசனின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு துவிச்சக்கர வண்டி ஒன்றை நல்லூர் வேலவன் மிக்சர் உரிமையாளரின் நிதிப் பங்களிப்புடன் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வழங்கினார். (இ



**தீபாவளி தினத்தன்று காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்ற கலாசார நிகழ்வின் போது...**

# வெற்றி புனையும் வேலே போற்றி!



## கந்தசஷ்டி விரதம் இன்று ஆரம்பம்

"வந்த வினைகளும் வருகின்ற வல்வினைகளும் கந்தனென்று சொன்னால் காணாமல் போகும்" என்பார்கள் பெரியோர்கள். ஒரு முறை, தேவர்களும் கொடும் வினையைச் சந்தித்தார்கள். முக்கண் பரமனாம் சிவனாரை மதியாமல் தட்சன் நடத்திய யாகத்தில் கலந்து கொண்டதால், பெரும் பாவத்துக்கு ஆளான தேவர்களைச் சூரபத்மன் வடிவில் வினைகள் சூழ்ந்தன.

அரிய வரங்களை பெற்ற சூரன் தேவலோகத்தைக் கைப்பற்றினான். அகப்பட்ட தேவர்களை அடிமையாக்கினான். செய்வதறியாது திகைத்த தேவர்கள், சிவனாரைச் சரணடைந்தார்கள். அவர்களை ரட்சிக்க சிவம் சித்தம் கொண்டார். முருக அவதாரம் நிகழ்ந்தது.

சிவனாரின் திருமுகங்களாகிய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோ ஜாதம் மற்றும் அவரின் உள்முகமாகிய அதோமுகத்தின் நெற்றிக்கண் திறக்க ஆறு பொறிகள் தோன்றின. அவற்றைச் சிவப்பரம்பொருள் வாயுதேவனிடம் அளித்தார்.

வாயுவோ, ஆற்றல்மிகு பொறிகளைத் தாங்க இயலாமல், அவற்றை அக்னியிடம் அளித்தார். அக்னி பகவான் பொறிகளைக் கங்கையில் சேர்த்தார். கங்கா தேவி அவற்றைச் சரவணப் பொய்கையில் சேர்த்தாள்.

அங்கே, பொறிகள் ஆறும் குழந்தைகளாய் மாறித் தவழ்ந்தன. கார்த்திகைப் பெண்களால் சீராட்டி வளர்க்கப்பட்டன.

உரிய காலத்தில் அம்மையும் அப்பனும் வந்தார்கள். ஆறு குழந்தைகளையும் அருகில் அழைத்து சேர்த்து அணைத்தாள் ஆதிசக்தி. ஆறு முகங்கள்- பன்னிரு கரங்களுடன் ஒருருவாய் ஒளிர்ந்து நின்றான் கந்தப் பெருமான். அக்கணமே தேவர்களின் வினைகள் யாவும் ஒழிந்தன என்றே சொல்லலாம். ஆம்! கந்தனருளால் விரைவில் அசுரகுலம் வீழ்த்தப்பட்டு தேவர் குலம் தழைத்தது.

தேவர்களை மட்டுமல்ல, கலியுகத்தில் வாழும் நம்மை ரட்சிக்கவும் ஓடோடி வருவான் வடிவேலன்.

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சேல் என வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒரு கால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார்முன்

எனப் போற்றுகிறது திருமுருகாற்றுப்படை. நாமும் சிந்தையில் கந்தனை நினைத்து, அவன் தாள்களில் சரண் புகுந்துவிட்டால், வெற்றிகள் பெருகும். வாழ்க்கை வளமாகும்.

கந்தனைச் சரணடைய - அவன் திருத்தாள்களைப் பற்றிக்கொள்ள ஏதுவான எளிய வழிகளை ஞானநூல்கள் பலவும் விபரிக்கின்றன. அவற்றில் ஒன்று ஸ்ரீகந்தசஷ்டி விரதம்.

சந்ததி சிறக்க... கந்த சஷ்டி விரதம்!

விரதங்களில் வார விரதம், நாள் விரதம், பட்ச விரதம் என்று மூன்று வகை உண்டு. வியாழன், சனி போன்ற ஏதாவது ஒரு நாள் இருக்கும் விரதம் வார விரதம் எனப்படும்.

மாதத்தின் ஏதாவது ஒரு நாள்... உதாரணமாக அமாவாசை, பௌர்ணமி தினத்தில் விரதம் இருப்பது நாள் விரதம். மாதத்தின் இரு நாள்கள் ஏதாவது ஒரு திதியில் - உதாரணமாக சஷ்டி, பிரதோஷம் ஆகிய நாட்களில் இருப்பது பட்ச விரதம் எனப்படுகிறது. இதில் சஷ்டி விரதம் சிறப்பானது.

'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்ற பழமொழியின் உண்மையான விளக்கமே, சஷ்டியில் விரதம் இருந்தால் அகமென்னும் பை சிறப்பானதாக மாறும் என்பதுதான்.

இன்னொரு வகையில் கூடச் சொல்லலாம். பிள்ளைப் பேறு இல்லாத பெண்கள் சஷ்டியில் விரதம் இருந்தால், அவர்களின் அகமென்னும் கருப்பையில் கரு வரும். இப்படியான சிறப்புகள் மிகுந்த சஷ்டி விரதம், காலம் காலமாக நம்மிடம் இருந்து வருகிறது.

ஐப்பசி மாதம், தீபாவளி கழிந்த பிரதமை நாளில் தொடங்கும் இந்த சஷ்டி விரதம் ஆறு நாட்கள் கடைப்பிடிக்கப்பட்டு, சஷ்டி நாளில் முடியும். அதுவே கந்தசஷ்டி விரதம் எனப்படுகிறது. சூரனை முருகப்பெருமான் வதைத்த நாளோடு இந்த விரதம் முடிகிறது.

ஐப்பசி மாத சஷ்டியில் தொடங்கி, ஒரு முழு ஆண்டில் வரும் 24 சஷ்டி நாட்களிலும் விரதமிருப்பது நல்லது. முடியாதவர்கள், இந்த ஐப்பசி சஷ்டி விரதத்தைக் கடைப்பிடிக்கலாம்.

### விரத நியதிகள்

காலையில் எழுந்து தூய்மையாகி, திருநீறிட்டு, வடக்கிலோ, தெற்கிலோ அமர்ந்து முருகப் பெருமானைத் தியானிக்கவேண்டும். பின்னர், முருகனை ஆராதித்து வழிபடவேண்டும். அப்போது, நைவேத்தியமாக நெய்யில் செய்த மோதகம் சமர்ப்பிப்பது சிறப்பு.

சஷ்டி விரத ஆறு நாட்களிலும் உண்ணாமல் இருப்பதுதான் நல்லது. எச்சில்கூட விழுங்காமல் இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள், இன்னமும் இருக்கிறார்கள். மறைந்த கிருபானந்த வாரியார் ஸ்வாமிகளின் தாயார், தனது 90 வயதிலும் இந்த விரதத்தை கடுமையாகக் கடைப்பிடித்தார் என்று அவரே கூறியிருக்கிறார்.

முடியவே முடியாத பட்சத்தில் விரத நாளில் ஒரேயொரு முறை மட்டும் ஆறு மிளகும், ஆறு கை அளவு நீரும் எடுத்துக்கொள்ளலாம். மிளகு வயிற்றில் அமிலக் கோளாறு வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது என்பதால், அதை எடுத்துக் கொள்ளலாம்.

ஆறு நாட்களும் விரதமிருந்து ஏழாவது நாளில் சிறப்பான பூஜைகளை மேற்கொண்டு அடியார்களுக்கு உணவிட்டு 'மகேஸ்வர பூஜை' மேற்கொள்ள வேண்டும். ஆறு நாட்களும் உண்ணாமல் விரதமிருந்து ஏழாவது நாளில் கடலில் நீராடி விட்டே விரதம் கைவிடும் பக்தர்களைத் திருச்செந்தூரில் இன்றும் காணலாம்.

உடலையும் மனதையும் சீராக்கும் கந்தசஷ்டி விரதம் இந்த வருடம் இன்று 8.11.2018 வியாழக்கிழமை தொடங்கி 6 ஆம் நாள் 13.11.2018 செவ்வாய்க்கிழமை சூரசம்ஹாரம் நடைபெறும். இந்தத் திருநாட்களில் உடல்-உள்ளச் சுத்தியோடு வழிபடுவோம். எல்லாம் வல்ல முருகனின் அருளைப் பெற்று மகிழ்வோம்.


# மணிவிழா வாழ்த்து

ஸ்ரீமான் சிவபாதம் நந்தகுமார் அவர்கள்

(வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்)

60

1958 - 2018



சுபமங்களம் நிறைதரு (08.11.2018)
பூரணைச் சந்திரனாய் ஓய்வில்லா
கல்விப்பணியாளனாய் நிதமாய்
மும்மொழியில் முட்டறுத்து
முடி சூடாமன்னனாய் பட்டத்துக்
கல்விக்கெல்லாம் சிறந்த
சீர்மியனாய் மகிழ்வுறு முகாமைத்துவ
முதல்வனாய் திட்டமிடல் மீள்திட்ட மிடல்
கொழுமியனாய் மனிதம் சமயம்
புனிதனாய் மிடுக்குடன் பகை பல வென்ற
எம் மண்ணின் மைந்தனாய்
மணிவிழா நாயகனாய் திகழ்
ஸ்ரீமான் சிவபாதம் நந்தகுமார்
நல முடன் நீடூழி வாழியவே!

அன்புடன் வாழ்த்தும்.

சைவசித்தாந்த பண்டிதர் சிவாகம உபதேச வாசஸ்பதி சிவஸ்ரீ.தியாக. சோமாஸ்கந்தராஜக் குருக்கள் ஆதீன ஹர்த்தா, தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில், நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீர மகாகாளியம்மன் வட பத்திரகாளியம்மன் தேவஸ்தானம்.

(6358)


## வைத்திய அத்தியட்சகர் நியமனம் தற்காலிகமாக இடை நிறுத்தம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகர் நியமிக்கப்பட இருந்த நிலையில் வைத்தியசாலை சமூகத்தின் எதிர்ப்பால் அது தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக வைத்திய சாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அவர் 07.11.2018 புதன்கிழமை கடமைகளை பொறுப்பேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து சாவகச்சேரி வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் நலன் புரிச் சங்கத்தினர் வடமாகாண ஆளுநரிடம் இடமாற்றம் வேண்டாம் என கோரிக்கை விடுத்ததன் பயனாக இடமாற்றம் தற்காலிகமாக ஆளுநரின் பணிப்பிற்கு அமைய செயலாளரால் இடைநிறுத்தப்பட்டதாகவும், மறு அறிவித்தல் வரை தற்போதைய அத்தியட்சகர் தனது கடமைகளைத் தொடர முடியும் எனத் தெரிவித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ப.அச்சுதன் கடந்த மார்ச் மாதம் ஆளுநரால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## காணாமற்போன ஊடகவியலாளரின் தந்தைக்கு யாழ்.ஊடக அமையம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் இராமச்சந்திரனின் தந்தையார் சுப்பிரமணியம் (கரவெட்டி, துன்னாலையில்) தனது 86 வயதில் காலமாகியுள்ளார். தனது இறுதிக்காலங்களில், மரணம் சம்பவிக்கும் வரை காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான இராமச்சந்திரனை தேடிக்கண்டறிவதிலும் அவருக்குநீதி பெற்றுக் கொள்வதிலும் அமரர் சுப்பிரமணியம் தொடர்ந்து பாடுபட்டு வந்திருந்தார்.

தனது வயோதிப மனைவி சகிதம் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகன் பற்றி தகவல்களை பகிர்ந்து கொள்வதில் என்றுமே அமரர் சுப்பிரமணியம் பின்னின்றதில்லை. தன்னை தேடி வரும் ஊடக செயற்பாட்டாளர்களுடன் தனதுமகனது விடுதலைக்காக அவர் நீண்ட பயணத்தை செய்துமிருக்கின்றார்.

தனது மகன் காணாமல் ஆக்கப்பட்ட நாளில் இருந்து அவரை கண்டறிய தேடி அலைந்து பதிலேதும் கிடைக்காமலேயே அவர் இந்த மண்ணிலிருந்து பிரிந்துள்ளார். தான் இறப்பதற்குள் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைப் பார்க்க வேண்டும் என்றும், தனது இறுதிக்கிரியைகளை தனது மகனான இராமச்சந்திரனே முன்னின்று நடத்த வேண்டுமெனவும் அவர் பல தடவை பேசியிருக்கின்றார். தனது மகனுக்கான சேமிப்பை தனது மரணத்தின் முன்னராக அவரிடம் கையளிக்கவேண்டுமென்ற அவரது கனவு கடைசி வரை மெய்க்காதே போயேவிட்டது.

தமிழர் மக்களது துன்பியல் வாழ்வில் காணாமல் ஆக்கப்பட்ட தம்து குடும்ப உறவுகளை தேடிக் கொண்டிருக்கின்றபோதே இந்த உலகை விட்டு பிரிந்து விடுவது தொடர்கின்றது. அதனுள் ஒன்றாக காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் இராமசந்திரனின் தந்தையார் சுப்பிரமணியத்தின் மரணமும் அமைந்திருக்கின்றது என யாழ். ஊடக அமையம் விடுத்துள்ள இரங்கல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


# மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா PR உடைய 1988.10.21 இல் சதயநட்சத்திரம், கும்பராசியில் பிறந்த கிரகபாவம் 61 (வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்) உயரம் 5' 6'' உடைய மணமகனுக்கு நற்குணமுடைய அழகிய படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (மணமகன் கொழும்பில் உள்ளார்)

தொடர்பு:- 077 978 0205

(தந்தை)

(6329)

# மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணியில்

# இதுவரை 18 சிறுவர்களின் மனித எச்சங்கள் மீட்பு





(மன்னார்)

மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணியானது 102 ஆவது நாளாக தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்ற நிலையில் கிடைக்கப்பெற்ற மனித எச்சங்களில் 18 மனித எச்சங்கள் சிறுவர்களினுடையது எனவும் பெண்கள் தொடர்பான விபரங்கள் முழு பரிசோதனையின் பின்னரே தெரியவரும் என்றும் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னாரில் தெடர்ச்சி யாக மழை பெய்கின்ற போதும் மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டும் அப்புறப்படுத்தப்பட்டும் வருகின்றன.

மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா மேற்பார்வையிலும் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையிலும் அகழ்வுப் பணியானது இடம் பெற்று வருகின்றது.

அந்த வகையில் நேற்றையதினம் மனித புதைகுழி வளாகத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த சட்டவைத்திய அதிகாரி, இந்த வாரம் முழுவதும் இடம்பெற்ற அகழ்வுப் பணி தொடர்பான தகவல்களைத் தெரிவித்தார். குறிப்பாக நேற்றைய தினத்துடன் 102 ஆவது தடவையாக மனித எச்சங்கள் அகழ்வுப்பணிகள் இடம் பெறுவதாகவும் இதுவரை 232 மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் 224 மனித எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலதிக மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகள் தொடர்சியக இடம் பெறுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இதுவரையான அகழ்வுப் பணிகளின் போது கிடைக்க பெற்ற மனித எச்சங்களில் 18 மனித எச்சங்கள் சிறுவர்களுடையது எனவும் பெண்கள் தொடர்பான விபரங்கள் முழு பரிசோதனையின் பின்னரே தெரியவரும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த வாரத்தில் சந்தேகத்திற்குரிய விதமாக சில தடயப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதில் மோதிரம் போன்ற ஒரு தடய பொருளும் மாபிளை ஒத்த ஒரு தடயப் பொருளும் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.


அதே வகையில் குறித்த புதைகுழியில் இருந்து கிடைக்கப் பெற்ற முக்கிய தடய பொருளான மலிபன் பக்கெற் தொடர்பான அறிக்கையானது நீதி மன்றத்துக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு அவ் அறிக்கை தொடர்பான விபரங்கள் தெரியாது என்றும் தெரிவித்தார். (2-285)




# கம்போடிய கண்ணிவெடி அகற்றும் குழு

# முகமாலை பகுதியை நேரில் சென்று பார்வை





(பரந்தன்)

கம்போடிய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கிளிநொச்சி முகமாலை பிரதேசத்திற்கு நேற்றுக் காலை 9 மணியளவில் விஜயம் செய்துள்ளனர். ஒன்பது பேர் அடங்கிய கம்போடிய கண்ணிவெடி அகற்றும் குழுவினர் முகமாலையின் பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் சென்று வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணியை பார்வையிட்டுள்ளனர்.

கம்போடியாவும் உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக அதிகளவு கண்ணிவெடி அபாயம் நிறைந்த நாடாக காணப்படுவதனால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வெற்றிகரமான கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளைப் பார்வையிட குறித்த குழுவினர் வருகை தந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கண்ணிடி வெடி அகற்றும் நிலையத்தின் ஏற்பாட்டில் இக் குழுவினர் விஜயம் மேற்கொண்டுள்ளனர். (2-312)

# இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 19.8 அடியாக உயர்வடைந்துள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 19.8 அடியாக உயர்வடைந்துள்ளது.

அண்மை நாட்களாக நாட்டில் நிலவும் பருவப்பெயர்ச்சி அடை மழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்பாசனக் குளமான இரணைமடு குளத்தின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

குளத்தின் நீர்மட்டம் நேற்று அதிகாலை வரை 19.8 அடியாக பதிவாகியுள்ளது. குளத்திற்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. குளத்தின் அபிவிருத்தியின் ஊடாக அதிக நீரைத் தேக்கும் வகையில் தற்போது தயாராகவுள்ள நிலையில், 22 அடிவரை நீர் உயர்ந்தால் இவ்வருட கால போகத்தை 22 ஆயிரம் ஏக்கர்கள் வரை வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும் எனவும் விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். தொடர்ந்தும் நீர்வரத்து அதிகரிதுள்ளமையால் மேலும் மழைவீழ்ச்சி கிடைக்கும் என்பதாலும் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படலாம்.

இதனால் மகிழ்ச்சியடைவதா இரணைமடு விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (2)

# இனந்தெரியாத நபர்களால் உயிரச்சுறுத்தல் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(வவுனியா)

இனந்தெரியாத நபர்கள் தாக்கிவிட்டு உயிரச்சுறுத்தல் விடுத்துச்சென்றதாக வவுனியா கண்டிவீதி நகரசபை விடுதியைச் சேர்ந்த எஸ். யோகஸ்ரீராசா என்ற குடும்பஸ்தர் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் கடந்த வாரம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

திருகோணமலையில் வசித்து வந்த குறித்த நபரும் குடும்பத்தினரும் தற்காலிகமாக வவுனியாவில் வசித்து வருகின்றனர். கடந்த 28 ஆம் திகதி இரவு வீட்டுக்கு வந்த 4 பேர் கொண்ட குழுவினர் பிரஸ்தாப நபரை அழைத்து அவரது மகன் தொடர்பான விபரங்களைக் கேட்டதாகவும் அதற்கு தான் பதிலளிக்காத போது தன்னை சரமாரியாகத் தாக்கியதுடன், கொலை அச்சுறுத்தல் விடுத்து விட்டுச் சென்றுள்ளார்கள்.

தாக்குதலில் படுகாயமடைந்து தான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் தனது குடும்பத்தினர் அச்சமைடைந்துள்ளதாகவும் இது குறித்து விசாரணை நடத்துமாறு தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (2-9)

# கடந்த மூன்றரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அரசு தமிழர்களுக்கு எதுவும் செய்யவில்லை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

நல்லாட்சி அரசு என்ற பெயரில் கடந்த மூன்றரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அரசு தமிழருக்கோ, அல்லது தமிழர் நலனுக்கோ எதுவும்செய்யவில்லை. மாறாக தமிழ் இனத்தை ஏமாற்றும் செயலிலேயே கடந்த அரசு செயற்பட்டது என வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்றரை வருடமாக தாங்கள் ஆதரவு தெரிவித்த நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்கள் பிரச்சினைகளை எவ்வாறு கையாண்டுள்ளது? என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லாட்சி அரசு என்ற பெயரில் கடந்த மூன்றரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அரசு தமிழருக்கோ, அல்லது தமிழர் நலனுக்கோ எதுவும் செய்யவில்லை. மாறாக தமிழ் இனத்தை ஏமாற்றும் செயலிலேயே கடந்த அரசு செயற்பட்டது.

அதேநேரம் அந்த அரசோடு இணைந்து செயற்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இந்த வருடத்திற்குள் தீர்வு கிடைக்கும் என தொடர்ச்சியாக கூறிவந்தது. ஆனாலும் தமிழருக்கு எதுவும் கிடைக்கவில்லை.

இந்த நாட்டின் வரலாற்றில் என்றுமில்லாத வகையில், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மட்டுமே மூலதனமாக வைத்து இலங்கையை ஆட்சி செய்யும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வேறு வழியின்றி கைகோர்த்து ஆட்சிப்பீடம் ஏற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

இதுவரை காலமும் ஒரு கட்சி தமிழ் மக்களுக்கு வழங்கிய உத்தரவாதங்களை மற்றொரு கட்சி எதிர்த்து வந்தது. சர்வதேச தலையீட்டின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் இலங்கையுடனான சர்வதேச சமூகத்தின் இராஜதந்திர உறவுகள் சுமுகமாக்கப்பட்டதுடன் எமது பிரச்சினைகளை அனைவரும் மெல்ல மெல்ல கைவிடத் தொடங்கிவிட்டனர்.

புதிய அரசாங்கம் உருவானதன் பின்னர் யுத்தக்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து பொறுப்புக்கூறலுக்கு கலப்பு பொறிமுறை ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இரண்டு வருட கால அவகாசத்தை இந்த அரசாங்கம் பெற்றுக்கொண்டது. இந்த விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்படாத நிலையில் மேலும் இரண்டாண்டு கால நீடிப்பையும் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் பெற்றுக் கொண்டது.

அடுத்துவரும் மார்ச் மாதத்துடன் காலநீடிப்பு வழங்கிய இரண்டு ஆண்டுகாலமும் முடிவடையும் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் செயற்பட ஆரம்பித்ததுபோல் நாடகமாடுகிறது. ஒட்டுமொத்தத்தில் எமது கொள்கை நிலைப்பாடு சரியானதே என்பது நிரூபிக்கப் பட்டு வருகின்றது. ஜனநாயகத்தில் எண்ணிக்கை பெரும்பான்மையின் முடிவுகள் எப்போதும் சரியானதாக இருக்காது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப் பட்டுள்ளது. (2-250)

# வவுனியாவில் அடை மழை; இயல்பு நிலை பாதிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று வரை பெய்து வரும் அடை மழை காரணமாக இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக கடும் வரட்சி ஏற்பட்டு கிணறுகள், குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்த நிலையில் கடந்த சில நாட்களாக மாலை மற்றும் இரவு வேளைகளில் மழை பெய்து வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலையில் இருந்து தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் தீபாவளி களை கட்டவில்லை. வீதிகளிலும் மக்களது நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டதுடன் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. (2-281)



கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயத்தில் முதன்முறையாக நரகாசுர சம்ஹாரம் தீபாவளிதிருநாளான நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நடைபெற்றது.

(படங்கள்:- கண்டாவளை செய்தியாளர்)

## சமுர்த்திப் பயனாளிகள் உள்வாங்கப்படாமை தொடர்பில்
# சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்
## முல்லை.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேறிய கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட 23 கிராம அலுவலர் பிரிவுகளில் எந்தவித மான சமுர்த்திக்கொடுப்பனவுகளும் வழங்கப்படாமையினால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் துணுக்காய் மாந்தைகிழக்கு உள்ளிட்ட பிரதேச செயலர் பிரிவுகளைச்சேர்ந்த 136 கிராம அலுவலர் பிரிவுகளிலும் வெலிஓயா பிரதேசத்தில் ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளிலும் தற்போது 11 ஆயிரத்து 53 பேருக்கு சமுர்த்திக்கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சுமார் 23 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு சமுர்த்திக்கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை. கடந்த எட்டு வருடங்களாக இந்த மக்களுக்கு சமுர்த்திக்கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக பல்வேறுபட்ட பதிவுகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இதுவரை தமக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் எதுவும் தமக்கு வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த 23 கிராம அலுவலர் பிரிவுகளிலும் ஒன்பதாயிரத்து 551 பேர் சமுர்த்திக்கொடுப்பனவுகளைப் பெற தகுதியிருந்தும் அவர்கள் சமுர்த்திப்பயனாளிகளாக உள்வாங்கப்படவில்லை என்றும் பாதிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரச அதிபர், இந்த சமுர்த்திப்பயனாளிகள் உள்வாங்கப்படாமை தொடர்பில் சம்பந்தப்பட்டஅமைச்சுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

அரச அதிபர் மட்டத்தில் நடக்கின்ற கலந்துரையாடலிலும் இதனை எடுத்துக் கூறியிருக்கின்றோம். குறிப்பாக, முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த அமைச்சரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பணிப்பாளர் கடமைகளை பொறுப்பேற்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புதிய பணிப்பாளர் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்ட வைத்திய கலாநிதி தங்கராஜா காண்டீபன் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் நீண்ட கால இடைவெளியின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையேற்ற நிரந்தரப் பணிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம்புனித பரியோவான் கல்லூரியின் பழைய மாணவரான வைத்திய கலாநிதி த. காண்டீபன்



தமது மருத்துவக் கல்வியை யாழ்ப்பாண மருத்துவபீடத்திலும், மருத்துவ முதுமாணிக் கற்கை நெறியை கொழும்பு மருத்துவபீடத்திலும் பூர்த்தி செய்துள்ளார். இவர் அரசவைத்தியர் சங்கத்தின் வடக்கு மாகாண ஒருங்கிணைப்பாளராக இருந்து வடமாகாண வைத்தியசாலைகளில் நிலவிய வைத்தியர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு பெரும் பங்காற்றியவர் ஆவார். (2-312)



கேதாரகௌரி விரதம் கிளிநொச்சியில் உள்ள பல ஆலயங்களில் குறிப்பாக அம்மன் ஆலயங்களில் நேற்று சிறப்பாக இடம்பெற்றது. கிளிநொச்சியில் பெருமளவான பெண்களும் மற்றும் ஆண்களும் பக்தி பூர்வமாக விரதத்தின் இறுதி நாளான நேற்று காப்பு கட்டி நிறைவு செய்துள்ளனர்.

## வவுனியாவில் 250 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் முதியோர் இல்லங்களில்

(கண்டாவளை)

வவுனியாவில் 250 இற்கும்மேற்பட்ட முதியவர்கள் முதியோர் இல்லங்களில் வாழ்ந்து வருவதாக மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. வவுனியா நகரத்தில் மட்டும் சுமார் பன்னிரண்டாயிரத்து 500 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இதில் கிட்டத்தட்ட 250 இற்கும் மேற்பட்டமுதியவர்கள்வவுனியா மாவட்டத்திலுள்ள சிவன்முதியோர் இல்லம்,அன்னை திரேசா முதியோர் இல்லம், கனகராயன்குளம்முதியோர் இல்லம்,சாயி முதியோர் இல்லம் என்பவற்றில் வாழ்ந்து வருகின்றனர் என தெரிவித்துள்ளது.

குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் ஒரு இலட்சத்து பதினேழாயிரத்திற்கும் மேற்பட்ட முதியவர்கள் வாழ்ந்து வரும் நிலையில் ஆயிரக்கணக்கான முதியோர்கள் உரிய பராமரிப்புக்களின்றி பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் முதியோர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

அத்துடன், பல முதியோர்கள் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் நல் உள்ளம் கொண்ட குடும்பங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (2-315)

# சமணங்குளம் கல்லுமலை விநாயகர் கோவிலில் தொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறிய செயல்
## மக்கள் விசனம்



(குருமன்காடு)

வவுனியா சமணங்குளம் கல்லுமலை விநாயகர் கோவிலில் தொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடு காரணமாக மக்கள் விசனமடைந்துள்ளனர்.

இதுபற்றி தெரியவருவதாவது, வவுனியா சமணங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம் கடந்த 1952ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களினால் வழிபாடு செய்யப்பட்டுவரப்பட்டது. இதேவேளை இக்கோவில் அமைந்துள்ள மலையில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற்தூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டடங்கள் என பல காணப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த சில நாட்களிற்கு முன்னால் தொல்பொருள் திணைக்களத்தினால் கல்,மணல் மற்றும்மகட்டப்பொருட்கள் இவ்வளாகத்தில் இறக்கி தமது வேலைகளை நேற்று முன்தினம் முன்னெடுக்கவிருந்த நிலையிலேயே பொது மக்களினால் இவ்வேலைகளை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையினால் பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இது தொடர்பாக பிரதேசவாசி ஒருவர் தெரிவிக்கையில்,

இவ்வாலயம் பரம்பரை பரம்பரையாக நாம் வழிபட்டு வருகின்றோம். ஆனால் தற்போது இவ்வாலயத்தில் தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தம் என்ற ரீதியில் புத்தர் சிலையை ஸ்தாபிக்க முயல்வதாக தெரிவித்தனர்.

இதேவேளை வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் து.நடராஜசிங்கம், முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று இது தொடர்பாக அப்பிரதேச மக்களுடன் கலந்துரையாடியதுடன் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் இது தொடர்பாக தொலைபேசியில் கலந்துரையாடியிருந்ததுடன், இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அவ்விடம் வந்த பொலிஸாரினால் ஆலய பரிபாலன சபையினர் மற்றும் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோரிடம் விசாரணைகளையும் முன்னெடுத்திருந்ததன் அடிப்படையில் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இது தொடர்பாக தொல்பொருள் திணைக்கள பிராந்திய முகாமையாளரிடம் வினவிய போது இவ்விடயம் அநுராதபுரம் காலத்து புராதன சின்னங்களாகும்.இவை அழியாமல் தடுப்பதற்காக இச்சின்னங்களை புனரமைக்கும் செயற்பாட்டினை செய்வதாக கூறியிருந்தார். (2-250)

## திட்டங்கள் ஊடாக வழங்கப்பட்ட வீடுகள் முழுமையாக கட்டிமுடிக்கவில்லை
## நிதியுதவிகளை பெற்றுத்தாருங்கள்-மக்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட நிரந்தர வீடுகளை முழுமையாக கட்டிமுடிக்காது அவ்வாறான வீடுகளில் வாழ்ந்து வரும் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலயுத்தங்காரணமாக பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய குடும்பங்களுக்கு பல்வேறு திட்டங்கள் ஊடாக வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

இதில்,ஆரம்பத்தில் நேப் திட்டம், மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபை ஆகியவற்றின் ஊடாகவும் ஒரு சில தொண்டு நிறுவனங்களின் ஊடாகவும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மற்றும் மூன்று இலட்சம் ரூபா மற்றும் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதிகளில் வழங்கப்பட்ட வீடுகளில் பெருமளவான இதுவரை முழுமைப்படுத்தாத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக, கல்மடு, கோணாவில் போன்ற பிரதேசங்களில் இவ்வாறான முழுமைப்படுத்தப்படாத பாதுகாப்பற்ற வீடுகளில் வாழும் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். இவ்வாறான வீடுகளை முழுமைப்படுத்துவதற்கு உரிய நிதியுதவிகளை பெற்றுத்தர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# தமிழ் அரசியல் கைதிகளில் சிலரை விடுவிக்க

# ஜனாதிபதி மைத்திரிக்கு உடன்பாடில்லை!

## முன்னாள் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ் அரசியல் கைதிகளை, கட்டம் கட்டமாக விடுவிக்கவே, நல்லாட்சி அரசாங்கம் தீர்மானித்திருந்தது. இதில், தான் ஒருபோதும் முட்டுக்கட்டையாக இருக்கவில்லை என்று தெரிவித்த முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, அரசியல் கைதிகளில் சிலரை விடுவிப்பதில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உடன்பாடு இருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.**

சட்டவிரோதமானதும் நெறிமுறையற்ற வகையிலும் செயற்பட்டு, இலங்கையின் அரசமைப்பை நெருக்கடிக்குள் தள்ள, ஒருபோதும் இடமளிக்கப்போவது இல்லையெனக் கூறியதோடு, நாடாளுமன்ற அதிகாரங்களை, சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

இந்தியாவின் றோ உளவுப் பிரிவு, ஜனாதிபதியைப் படுகொலை செய்ய முயற்சித்ததாகத் தெரிவிக்கும் குற்றச்சாட்டின்உண்மைத்தன்மை, அவசர அவசரமாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திப் பேசியதிலிருந்தே புலனாகின்றதென்றும், ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் அடுத்த பிரதமராக நியமிப்பது தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சஜித் பிரேமதாச மற்றும் கரு ஜெயசூரியவுடன், கடந்த 8 மாதங்களாகப் பேசியதாக, ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அவருக்கு, தான் அந் தப் பிரதமர் பதவியில் இரு ப்பது பிரச்சினையென்றால், தன்னிடம் பேசியிருக்கலாமெனக் கூறிய விக்கிரம சிங்க, இந்த 8 மாதக் காலப் பகுதியில் தான், தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டு தோற்கடிக்கப்பட்ட தென்றும் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பை மேற்கொள்ள வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே கோரிக்கை முன்வைத்துள்ளதென்றும் ஏனைய கட்சிகள், இதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்றும் கூறிய அவர், புதிய அரசமைப்புக்கான பரிந்துரைகளில், கூட்டமைப்பினரால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு உள்ள தென்றும் தெரிவித்தார்.


இதேவேளை, மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வுகள் வழங்கப்பட வேண்டுமென்றும் இந்த அதிகாரங்கள், அளவானதாகவும் பிரச்சினைகள் ஏற்படாத வகையிலும் பகிரப்படும் பட்சத்திலேயே, சமத்துவமானதும் சமாதானமானதுமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென்றும் ரணில் தெரிவித்தார். (இ-7)

---

### 1000ரூபா சம்பள விவகாரம்

## நிதி அமைச்சிலிருந்து சாதகமான முடிவு வரும்

### வடிவேல் சுரேஷ் காத்திருப்பு



(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள விவகாரம் தொடர்பில், நிதி அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகவும் எனவே, இவ்வாரத்துக்குள், நிதி அமைச்சிலிருந்து சாதகமான பதில் வருமென்று, தான் நம்புவதாகவும் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர் மேலும் தெரிவிக்கையில், தனக்கு எதிராக முகநூலில் போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அரசியல்வாதி ஒருவரின் பணிப்புரையின்பேரில், ஹற்றனை மையமாகக்கொண்டு இயங்கிவரும் சிலரே, இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனரென்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப் போவதாகவும், இந்தப் போலியான பிரசாரங்களுக்குப் பின்னால் பல ஆசிரியர்கள், மலையகத்தின் புத்திஜீவிகள் உள்ளிட்ட 42 பேர் இதுவரையில் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் கணக்கிட்டு கூறினார்.

இலங்கைக்கு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்திருந்தபோதிலும் 1977 ஆம் ஆண்டே மலையகத்திற்கு சுதந்திரம் கிடைத்ததாகவும், மலையக வரலாற்றில் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அமைச்சுப் பதவி கிடைத்ததில்லை எனவும், அம்மாவட்டத்திலிருந்து அமைச்சராகியிருப்பது தான் ஒருவரே எனவும் அவர் தெரிவித்தார்.

தனக்கு வழங்கப்படும் நாடாளுமன்றக் கொடுப்பனவுகளை தான் ஒருபோதும் பெற்றுக்கொண்டதில்லை எனவும், யார் நாட்டை ஆட்சி செய்கிறார்கள் என்ற கவலைப்படுவதைவிடுத்து சிறுபான்மை மக்களான மலையக மக்களுக்கு தேவையானவற்றைப் பெற்றுக்கொடுப்பதே தனது இலக்கு எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால், வெறும் கோரிக்கைகளை மாத்திரமே முன்வைக்க முடியும் என்றும் ஆனால் அமைச்சர் என்கிற அதிகாரம் இருந்தால், மலையக மக்களுக்கு சேவை செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும் சம்பள அதிகரிப்பை கருத்திற்கொண்டு, கம்பனிகளுக்கு இதுவரையில் வழங்கி வந்திருந்த மானியங்களை இரட்டிப்பாக்கவும் தான் தீர்மானத்திருப்பதாகவும் வடிவேல் சுரேஷ் சுரேஷ் தெரிவித்தார். (இ-7)

---

## சீரற்ற காலநிலையால் மட்டு.வில் 876 பேர் பாதிப்பு



(ஏறாவூர்)

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 249 குடும்பங்களைச் சேர்ந்த 876 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 179 குடும்பங்களைச் சேர்ந்த 656 பேர் இடம்பெயர்ந்து 3 பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை கொழும்புக்கான புகையிரத சேவை மற்றும் பல பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாக இடர் அனர்த்த முகாமைத்துவ மாவட்ட இணைப்பாளர் எம்.ஏ.சி முகமட் றியாஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிவரை 124.3 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. அதேவேளை செவ்வாய்க்கிழமை காலையில் இருந்து மாலை வரை 60 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

திங்கட்கிழமை ஆரம்பித்து தொடர்ந்து பெய்துவரும் மழையினால் எற்பட்டுள்ள வெள்ளத்தினால் வாகரை, கோறளைப்பற்று, கோறளைப்பற்று மத்தி ஆகிய 3 செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 249 குடும்பங்களைச் சேர்ந்த 876 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் பாதிக்கப்பட்ட 179 குடும்பங்கள் 656 பேர் இடம் பெயர்ந்து வாகரை, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களிலுள்ள 3 பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். பிரதேச செயலாளர் ஊடாக இவர்களுக்கான சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை வெள்ளத்தினால்மட்டக்களப்பு புனானை புகையிரத நிலையத்துக்கு அருகில் புகையிரத தண்டவாளம் சேதமடைந்துள்ளதையடுத்து புகையிரத போக்குவரத்து சேவை துண்டிக்கப்பட்டுள்ளதுடன் பாதிப்படைந்த தண்டவாளத்தை சீர் செய்யும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.

கிரான் பிரதேசத்தில் உள்ளக சகல போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலகம் மற்றும் பிரம்படித் தீவுக்கு செல்கின்ற பாதையும் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் அந்த பிரதேசத்தில் மக்களை மீட்க மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கமைய படகு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உன்னிச்சையில் 6 அங்குல உயரத்திற்கு 3 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன் ரூபம் குளத்தில் இருந்து 4 அடி உயரத்துக்கு வான் கதவு திறக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லை.

ஆனால் தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி இடம்பெறுமானால் மாவட்டத்திலே அதிகளவான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றதுடன் சகல பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்களும் முன்னாயத்தமாக இருக்கின்றதுடன் தொண்டர் அமைப்புக்களும் முடக்கி விடப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (இ-7)

---

## நாங்கள் இணைய மாட்டோம்

### ஜனாதிபதியிடம் நேரடியாக கூறிய மனோ




(கொழும்பு)

நாகரிகமான ஒரு அரசியல் இயக்கம் என்ற அடிப்படையில், தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தில் இணையப்போவதில்லை என உறுதியாக தெரிவித்துள்ளது.

இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்து நேரடியாகவே கூறியதாக மனோ கணேசன் தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியை சேர்ந்த 6 பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

---

### 11 தமிழர்கள் கடத்தல்

## நேவி சம்பத் மீண்டும் விளக்கமறியலில்



(கொழும்பு)


லெப்டினனட் கொமாண்டர் ஹெட்டியாராச்சி முதியன்சலாகே சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி எனும் நேவி சம்பத் எதிர்வரும் 21ஆம் திகதி வரை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

2008 ஆம் ஆண்டு கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமற் போன சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த அவர் கொழும்பு லோட்டஸ் வீதி பிரதேசத்தில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது மீண்டும் விளக்கமறியல் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

# கலைத்தரிசனம்





# வைத்திய கலாநிதி, கலாபூஷணம் மயில்வாகனம் இராசதுரை

## அவர்களுடனான சந்திப்பு

**இலக்கியம், வைத்தியம், யோகாசனம், நாட்டாரியல், ஆய்வியல் எனப் பல தளங்களில் சிறந்து விளங்கும் இவர் 1940 ஆம் ஆண்டு ஆனி மாதம் 26 ஆம் திகதி பருத்தித்துறை இன்பர்சிட்டியில் பிறந்தார். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் வைத்தியத்துறையோடு கலைத்துறையையும் தன்னோடு இணைத்துக்கொண்டு சிறப்பான பணியாற்றினார். "வன்னிப்பெரு நிலப்பரப்பில் நுளம்புகளில் ஆய்வு", "எழுத்துரு ஆக்கங்களின் தொகுப்பு" ஆகிய இரு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய கட்டுரைகளில் "பயமே கடவுள்", "முந்தியது மதமா? மொழியா?" அதிக மானவர்களால் விரும்பிப் படிக்கப்பட்ட கட்டுரைகளாகும். தனது 78 வயதிலும் எந்தவிதச் சோர்வுமின்றி தனது வைத்தியம், கலைத்துறைகளில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார். இவர் 2015 ஆம் ஆண்டு இலங்கைக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலாபூஷண" விருதையும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் சாமசிறி மற்றும் தேசமானிய விருதுகளையும் பெற்றார்.**

**➢வைத்தியராகத் திகழும் தாங்கள் கலைத்துறைக்குள் தங்களின் பிரவேசம் பற்றிக் கூறுங்கள்?**

சிறு வயதிலேயே இயல்பாகவே பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் இருந்தது. இவற்றில் சொல்லப்பட்ட நல்ல விடயங்களைக் குறிப்பெடுத்துக் கொள்வேன். வேண்டிய விடயங்களை வேண்டிய நேரத்தில் சொல்லுவேன். சில பகுதிகளை மனனம் செய்வேன். எனக்குள் ஓர் இலக்கிய ஆர்வம் இருப்பதாக சிறு வயதிலேயே அடையாளம் கண்டுகொண்டேன். எதையும் மிச்சம் வைக்காமல் படிக்கும் பழக்கம் எனக்கிருந்தது. அதுவே என்னை எழுத வைத்தது. இப்போது போல அப்போது வானொலி, தொலைக்காட்சி என்பன இல்லாமையும் திரைப்படங்களை எப்போதாவது மட்டுமே பார்க்க முடிந்தமையும் எம்மை வாசிப்பிற்குள் பிடித்து வைத்தது எனலாம்.

**➢பூச்சியியல் ஆய்வாளரான தாங்கள் காத்திரமான இரண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளீர்கள். அதுபற்றி?**

1962 ஆம் ஆண்டு வைத்திய பூச்சியியல் உதவியாளராக முதுமாணிப்பட்டம் பெற்று யானைக்கால் நோய்த்தடுப்புப் பகுதியில் கடமையாற்றி 1969 ஆம் ஆண்டு இலங்கை பூராகவும் பரவி சாதி, மதம், இனம், மொழி பிரதேச வாதம் எதுவுமின்றி ஆட்களைக் கொன்றொழித்த கால கட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தின் மலேரியா தடை இயக்கத்திற்கு குருநாகல் பிராந்தியத்திற்கு மாற்றலாகி அங்கிருந்து கதிர்காமம், தங்காலை, அம்பாந்தோட்டை, மாத்தறை, அநுராதபுரம், மட்டக்களப்பு, கிளிநொச்சி போன்ற இடங்களில் கடமை புரிந்தேன். அப்போது மலேரியா தொடர்பான விழிப்புணர்வுக்காக சிங்களப் பிரதேசங்களில் சிங்கள மொழியிலும் தமிழ்ப் பிரதேசங்களான கிளிநொச்சி, மட்டக்களப்பு போன்ற பிராந்தியங்களில் தமிழில் நாடகங்கள், தெருவிழி நாடகங்கள், வில்லுப்பாட்டு, இயல்,இசை, நாடகங்களை நடத்தி பன்முகப்படுத்தப்பட்டு மருத்துவமான ஆங்கில வைத்தியம், தமிழ் சித்த வைத்தியம், கோமியோபதி போன்ற வைத்தியங்கள் மூலம் மலேரியா நுளம்பை அழித்தோம். 2003 ஆம் ஆண்டு "வன்னிப் பெருநிலப்பரப்பில் நுளம்புகளில் ஆய்வு" எனும் நூலை இந்நூலுக்கான சிறந்த விருதை அன்றைய சுகாதார அமைச்சரும் இன்றைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன வழங்கியிருந்தார். 2017 ஆம் ஆண்டு "எழுத்துரு ஆக்கங்களின் தொகுப்பு" எனும் நூலை எழுதி வெளியிட்டேன். இந்நூலில் டெங்கு நுளம்பு கடித்து மனிதன் சாகலாமா? முந்தியது மதமா? மொழியா? பயமே கடவுள், நுளம்புகள் எயிட்ஸ் நோயைப் பரப்புமா? போன்ற தலைப்புக்களில் கட்டுரைகளை எழுதித்தொகுத்துள்ளேன்.

**➢தாங்கள் நாட்டார் துறையிலும் அதிக ஈடுபாடு உடையவர். அதுபற்றி?**

ஏட்டுக்கல்வியறிவில்லா நாட்டுப்புறங்களில் தொன்றுதொட்டு வழக்கில் இருந்து வரும் பாடல்கள் நாட்டார் பாடல்கள் அல்லது கிராமியப் பாடல்கள், பாமரப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், வாய்மொழி இலக்கியம் என்றெல்லாம் கூறப்படுகின்றது. ஆங்கிலத்தில் 'Folk lore' என்று அழைக்கின்றனர். கிராமங்களில் வாழும் மக்களையும் அவர்களின் மரபு, மொழிநடை, பழக்கவழக்கம், பண்பாடு, பாரம்பரியம், நம்பிக்கை, சமய கலாசாரம், தொழில், வேடிக்கை, விநோதம், கலை, இலக்கியப் பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் பிம்பங்களே நாட்டார் பாடல்கள். நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பின்னிப் பிணைந்துள்ளது. கேட்போரிடம் நகை, அழுகை, இளிவரல், மருட்சி, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, நடுநிலை எனும் ஒன்பது ரசங்களையும் உண்டாக்கும் திறன் படைத்து இப்பாடல்களை மருத்துவிச்சி வாழ்த்து, தாலாட்டு, குழந்தைப்பாடல், நகைச்சுவைப் பாடல், தத்துவப் பாடல்கள், கேலிப் பாடல்கள், கோலாட்டம், கும்மி, விளையாட்டுப் பாடல், கதைப்பாடல், பொல்லடிப்பாடல், பிரார்த்தனைப் பாடல், வசந்தன் பாடல், ஒப்பாரிப் பாடல் என வகைப்படுத்தலாம். ஏராளமான நாட்டார் பாடல்களை எழுதியுள்ளேன்.

**➢ தாங்கள் யோகக் கலையிலும் அதிக ஈடுபாடு உடையவராக இருக்கிறீர்கள். அதுபற்றி?**

நான் தினமும் காலையில் யோகப் பயிற்சி செய்து வருகின்றேன். ஆதிகால மனிதன் வேட்டையாட பல மைல்கள் நடந்தான், ஓடினான், மரங்களில் ஏறினான், ஆறுகளில் நீந்தினான், மரம் வெட்டினான். மேலும் இது போன்ற உடலுக்கு வலுவைத் தருகின்ற பல வேலைகளைச் செய்தான். தற்போது எல்லாமே இயந்திரமயமாகி விட்டதனால் மனிதனுக்கு பயிற்சி இல்லாமல் போய்விட்டது. யோகா செய்தால் உடல்,உளம் பேண முடியும். நான் சூரிய நமஸ்காரம், உட்கட்டாசனம், தாடாசனம், ஏகபாத ஆசனம், மயூராசனம், வஜ்சிராசனம், பத்மாசனம், சிரசாசனம், பச்சிமோத்தாசனம், சுப்தவஜ்ராசனம், புஜங்காசனம், சலபாசனம், தனுராசனம், பவளமுத்தாசனம், நவாசனம், சாந்தியாசனம் போன்ற பல ஆசனங்களையும் மூச்சுப் பயிற்சியும் செய்வேன். இன்றைய நவீன சிற்பிகளான வாலிபர்கள் வீரமும் விவேகமும் பெற்றிடவும், எண்ணங்களிலே எழுச்சி, சிந்தனையிலே மறுமலர்ச்சி, உடலில் மாபெரும் வலிமை, உண்ட உணவு எளிதில் ஜீரணமாகி உடலில் கலக்க யோகாவைச் செய்து வருதல் வேண்டும். தொற்றாத நோய்களிலிருந்து விடுபடலாம். ஆயுள் நீண்டு ஆரோக்கியமாய் வாழலாம்.

**➢தாங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றிக் கூறுங்கள்?**

இலங்கைக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷண விருதையும் அகில இலங்கை நல்லுறவு ஒன்றியத்தினால் சாமசிறி மற்றும் தேசமானிய விருதையும் சிறந்த டெங்கொழிப்பிற்காக ஜனாதிபதி விருதையும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பண்பாட்டுப் பேரவையினால் "கலைச்சுடர்" விருதையும் பெற்றேன்.

**➢ தங்களின் எழுத்துரு ஆக்கங்களின் தொகுப்பு நூலில் பயமே கடவுள் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது பற்றி?**

ஆதிகாலத்தில் மனிதனின் பகுத்தறிவு வளர்ச்சியடையாத காலகட்டம் கடந்து பகுத்து மட்டும் அறியும் நிலை வளர்ச்சியடைந்து இன்று ஆறு நேர் நிலையடைந்து எல்லையில்லா நிலைக்கு வளர்ந்து மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் இரண்டிலும் மனித இனம் வளர்ச்சியடைந்து விட்டது. முன்னைய கால கட்டத்தில் பயத்தின் காரணமாக இயற்கையைக் கடவுளாக வணங்கினான் மனிதன். ஏனெனில் என்னதான் பகுத்தறிவு வளர்ந்தாலும் இயற்கையை எதிர்த்து நிற்க முடியாது என்பதை மனிதன் உணர்ந்திருந்தான். இதே நிலை இன்றும் நிலைத்து நீடித்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பிரபஞ்சம் இருக்கும் வரை அது தொடரவே செய்யும். ஐம்பூதங்களாகிய நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு எனும் ஐந்தையும் மனிதர்கள் கடவுளராக அன்று வழிபட்டார்கள். மேலும் பரிணாம வளர்ச்சியில் முன்னேறிய பொழுது மிருகங்கள், தாவரங்களால் பயமுறுத்தப்பட்ட பொழுது அவற்றையும் தெய்வமாக வழிபட்டார்கள். இந்த விடயம் சைவ சமயத்தில் ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால்தான் பயத்தின் பிரதிபலிப்பே கடவுள் என மனிதன் கண்டு தன்னை மறந்து கடவுளே எல்லாம் என சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தத்திலும் ஒவ்வொரு பெயரில் அழைக்கிறார்கள்.

**➢தாங்கள் மனந்திறந்து கலையுலகிற்கு கூறுவது?**

இதை மனதினில் நிறுத்தி மனிதர்கள் மனிதர்களாக வாழக் கற்று, ஒரு நன்னெறி முறைக்கமைய வாழ்வார்களானால் அதாவது மகாத்மா காந்தி கூறிப் போந்தமை போன்று மனச்சாட்சியே கடவுள் என்பதை ஒவ்வொருவரும் கடைப்பிடிப்பார்களானால் இந்த உலகம் சுவர்க்க பூமியாகும். இன்று சமயங்களின் பெயரால் அதாவது கடவுளின் பெயரால் மனிதர்களிடையே பாகுபாடு நிலவி, இல்லை பாகுபாட்டை வளர்த்து அதில் குளிர் காய்ந்து, அத்துடன் மொழிப் பாகுபாட்டையும் வளர்த்து மனுக்குலத்தையே அழிக்கும் அதர்ம முறையையே வளர்த்துத் தம்மைத்தாமே அழிக்கும் வழிவகைகளை ஏற்படுத்தி விட்டார்கள். இதனை முடிவுறுத்துவதற்கான வழி என்ன? தற்போதைய அழுக்கடைந்த சமுதாயம் மெல்ல மெல்ல தண்ணீரால் கழுவப்பட்ட ஊத்தைபோல தம்மாலேயே தாம் அழிந்து முற்பந்தியில் குறிப்பிட்டது போல கலியும் 2000 வருடங்களுக்கொரு தடவை மாற்றம் ஏற்படுவது போன்று ஒரு யுக மாற்றமாக கிறேத யுகத்துக்குச் செல்லும். உதாரணமாக 2004 இல் ஏற்பட்ட சுனாமி அழிவை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இந்தச் சுனாமி ஓர் அர்த்தஜல பிரளயமெனக் கொள்ளலாம். ஐம்பூதங்களும் ஒன்றிணைந்து பிரளயம் ஒன்று ஏற்படுமானால் அது யுக யுகாந்திர பிரளயமாகும். அப்போது இந்தப் பூமியின் தற்போதைய பூகோள அமைப்பு முழுமையாக மாற்றி அமைக்கப்பட்டு புதிய தரை, கடல், மார்க்கங்கள் புதிதாக வளர்ச்சி அடையும் என்பது தீர்க்க தரிசிகளான ரிஷிகளின் வாக்கு. இதை உணராமல் நான் தான் எல்லாமும். என்னாலேயே எல்லாம் நடக்கின்றன. நான்தான் கருவியும் கர்த்தாவுமாக இருக்கிறேன் என்னும் ஆணவம் தலை தூக்கி மனிதனை ஆட்டிப் படைக்கின்றது. இதே நிலை உலகம் முழுவதிலும் உள்ள நாடுகள் மனிதர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இதையே பகவத் கீதையில் பரமாத்மா, கண்ணபிரான், அர்ச்சுனனுக்கு போர்க்களத்தில் யான் கர்த்தா நீ கருவி என்று எடுத்தியம்பினார் என்றால் அது வெறும் கற்பனை வாதம். புராணக் கதை என்று கூறுவோரும் எம்மிடையே பலர் உள்ளனர். ஆனால் கற்பனையோ, காவியமோ, புராணக்கதையோ எதுவானாலும் அவற்றில் இருக்கும் தத்துவத்தை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். தாமாக விளங்கிக்கொள்ள இயலாததோடு மற்றவர்களின் விளக்கத்தையும் விளங்கிக் கொள்ள மாட்டாதவர்கள் தான் இந்தப் பூவுலகில் இருக்கிறார்கள். இது எமக்கு எமது சமுதாயத்தின், சமூகத்தின் பலவீனமான சாபக்கேடு மட்டுமல்ல, ஈனத்தனமான செயற்பாட்டில் சிந்தனையும் பிழையான பிரயோக வாதமுமாகும்.

சிங்கள அரசியல் கட்சிகளை வைத்து தமிழனை எந்தச் சிங்களத் தலைமை ஆள்வது என்ற கேள்வியின் தொக்கில், தமிழரில் தமிழரை ஆள தமிழன் எவரும் இல்லை என்பதே. தமிழர்களுக்குத் தலைமை வகித்தவர்கள் எல்லாம் சிங்களத் தலைமைகளுக்கு அடிபணிந்தவர்களே! ஏன் இன்று தமிழ்க்கடவுள் என்று கூறிக்கொள்ளும் கதிர்காம முருகனே சிங்கள மொழி பேசும் சிங்களக் கடவுளாக மாறிவிட்டார் என்றால், கடவுளுக்கு மொழி உண்டா? இல்லை இதனால் தமிழர்கள் அகவணக்கம் என்று மௌன அஞ்சலி செலுத்தி தமது செயற்பாடுகளைச் செய்தார்கள். இதுவே வடக்கில் செல்வச்சந்நிதி கோயிலிலும் கிழக்கில் மண்டூர் கந்தசுவாமி கோயிலிலும் அகவணக்கப் பூசையாகக் கடைக்கொள்ளப்படுகின்றது.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

# பாரதம்

## கர்நாடக இடைத்தேர்தலில் காங்கிரசின் வெற்றி விராட் ஹோலி பெற்ற வெற்றி போல் உள்ளது

### முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம் டுவிட்

(பெங்களூர்)

கர்நாடக இடைத்தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி பெற்ற வெற்றி டெஸ்ட் போட்டிகளில் விராட் ஹோலி பெற்ற வெற்றிபோல் உள்ளது என முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

கர்நாடக மாநிலத்தில் 3 பாராளுமன்ற தொகுதிகள் மற்றும் 2 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த 2 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த நிலையில், முன்னாள் நிதி அமைச்சரும்,



சிரேஷ்ட காங்கிரஸ் தலைவருமான ப.சிதம்பரம் இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில்,

கர்நாடக இடைத் தேர்தலில் காங்கிரஸ் பெற்ற வெற்றி டெஸ்ட் போட்டிகளில் விராட் ஹோலி பெற்ற வெற்றியைப்போல் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கர்நாடக இடைத் தேர்தலில் காங்கிரஸ் ம.ஜ.த கூட்டணி கட்சி 4-1 என்ற கணக்கில் வென்றுள்ளது.

இந்த வெற்றி விராட் ஹோலி தலைமையில் இந்திய கிரிக்கெட் அணி பெற்றுக்கொள்ளும் டெஸ்ட் தொடர் வெற்றிகளைப் போல் உள்ளது என தெரிவித்து இதில் கூட்டணி பலன் தந்துள்ளது எனவும் பதிவிட்டுள்ளார். (7)

### ஈரான் சபஹார் துறைமுக விவகாரம்

## இந்தியாவிற்கு விலக்கு அளித்தது அமெரிக்கா



(வோஷிங்டன்)

ஈரானில் உள்ள சபஹார் துறைமுக வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் அமெரிக்கா பொருளாதார தடைகளில் இருந்து இந்தியரவுக்கு விலக்கு அளித்துள்ளது.

ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்ட அமெரிக்கா, அந்நாட்டுக்கு எதிராக கடுமையான பொருளாதார தடைகளையும் அமல்படுத்தியுள்ளது. நவம்பர் 5 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்ட இந்த பொருளாதார தடை இது வரை இல்லாத மிக கடுமையானது என்று கூறப்படுகிறது. குறிப்பாக ஈரானிலிருந்து பெற்றோலியத்தை இறக்குமதி செய்ய உலக நாடுகளுக்கு தடை விதித்துள்ளது. எனினும், இந்தியா, சீனா உள்ளிட்ட 8 நாடுகளுக்கு மட்டும் தற்காலிகமாக விலக்கு அளித்துள்ளது.

இந்தப் பொருளாதாரத் தடைகளால், அணு ஆயுதங்கள் தொடர்பான ஈரானின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்படும் என்று அமெரிக்கா நம்புகிறது.

இந்நிலையில், ஈரானில் சபஹார் துறைமுகத்தில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் ஆப்கானிஸ்தானை இணைக்கும் புகையிரத பாதை அமைக்கவும், இந்தியாவிற்கு சில அனும தியை அமெரிக்கா வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் உரையாற்றும் போது,


"நீண்ட ஆலோசனைக்கு பிறகு, சபஹார் துறைமுகத்தின் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளவும், இங்கிருந்து ஆப்கானிஸ்தானுக்கு பொருட்களை கொண்டு செல்வதற்காக புகையிரத பாதை அமைக்கும் பணிகளை மேற்கொள்ளவும், அமெரிக்கா சில அனுமதியை வழங்கி உள்ளது. ஈரானிலிருந்து பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்யவும் அனுமதித்துள்ளது" எனத் தெரிவித்தார். (7)

## பண மோசடி குற்றச்சாட்டு நிரவ் மோடியின் சொத்துக்கள் முடக்கம்

(டில்லி)

பஞ்சாப் தேசிய வங்கியில் சுமார் 31 ஆயிரம் கோடி ரூபாய் பண மோசடி செய்து வெளிநாட்டிற்கு தப்பியோடிய நிரவ் மோடியின் 133.5 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.

மும்பையைச் சேர்ந்த வைர வியாபாரி, நிரவ் மோடி இவரும், இவரது உறவினர் மௌஹல் சோக்சியும், மும்பையில் உள்ள பஞ்சாப் தேசிய வங்கிக் கிளையில் 31



ஆயிரம் கோடி ரூபாய் கடன் பெற்று, அதனை திரும்ப செலுத்தாமல் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றனர். இந்த வழக்கை, சி.பி.ஐ. மற்றும் அமு லாக்கத் துறையினர் விசாரி த்து வருகின்றனர். இந்த நிலையில் நிரவ் மோடியை விசாரணைக்கு நேரில் முன்னிலையாகுமாறு அமுலாக்கத்துறை பலமுறை, கடிதம் அனுப்பியும் முன்னிலையாகவில்லை. இதனையடுத்து இவரை கைது செய்ய, 'இன்டர்போல்' எனப்படும் சர்வதேச பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேலும் டுபாயில் நிரவ் மோடி மற்றும் அவரது குழு நிறுவனங்கள் என மொத்தம்11 நிறுவனங்களின் 133.5 கோடி மதிப்புள்ள சொத்துக்களை அமுலாக்கத்துறை முடக்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (7)

## அமெரிக்காவில் இ...


### பிரதிநிதிகள் சபை ஜனந... செனட்சபையை தக்க வை...

(வோஷிங்கடன்)

அமெரிக்க இடைத் தேர்தலில் ஜனநாயக கட்சி, பிரதிநிதிகள் சபையை கைப்பற்றியுள்ளது என்றும், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அங்கம் வகிக்கும் குடிரசுக் கட்சி, செனட் சபையின் பெரும்பான்மையை தக்க வைத்துக் கொண்டுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க இடைத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பமானது. இந்த வாக்கெடுப்பானது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முதலாவது இரு வருட காலப் பதவிக் காலம் தொடர்பான மக்களின் கருத்தை அறியும் ஒரு வாக்கெடுப்பாக நோக்கப்படுகிறது.

அத்துடன் இது அவரது எஞ்சியுள்ள இரு வருட பதவிக் காலம் தொடர்பில் தீர்மானிப்பதாகவும் உள்ளமை






குறிப்பிடத்தக்கது.

மேற்படி தேர்தல் மூலம் அமெரிக்க பாராளுமன்ற பிரதிநிதிகள் சபைக்கான அனைத்து 435 ஆசனங்கள் மற்றும் செனட் சபையின் 100 ஆசனங்களின் 35 ஆசனங்கள் என்பவற்றுக்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும் 50 மாநிலங்களில் 36 மாநிலங்களுக்கான

## ஆப்கானில் தலிபான்க... எட்டு பொலிஸா...



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நேற்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் 8 பேர் பலியாகினர். இந்த வாரத்தில் மட்டும் தலிபான்கள் நடத்திய இரண்டாவது

## படேலுக்கு பிரம... முட்டாள்தன...

### பிரிட்டன் எம்.பி விமர்சனம்

(லண்டன்)

பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இங்கிலாந்திடம் இருந்து நிதியுதவி பெற்ற இந்தியா, சர்தார் வல்லபாய் படேலுக்கு பிரமாண்ட சிலையை எழுப்பியிருப்பது முட்டாள்தனமானது என்று பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் விமர்சனம் செய்துள்ளார்.


இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் 182 மீற்றர் உயரத்தில் சர்தார் வல்லபாய் படேலுக்கு மத்திய அரசு சிலை வைத்துள்ளது. இதுகுறித்து பிரிட்டன் கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பீற்றர் போன் விமர்சனம் செய்துள்ளார். மகளிர் மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட மேம்பாட்டிற்காக கடந்த 5 ஆண்டுகளில் பிரிட்டனிடமிருந்து இந்தியா சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (7)



# வெளிநாடு

## ல் இடைத்தேர்தல்

### னநாயகக்கட்சி வசம்;
### வைத்த குடியரசுக்கட்சி




அத்துடன் பிரதிநிதிகள் சபையில் தேவையான 23 இடங்களைக் கைப்பற்றி ஜனநாயகக் கட்சி பெரும்பான்மை பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் விர்ஜினியா, ஃப்ளோரிடா, பென்சில்வேனியா, கொலராடோ ஆகிய இடங்களில் ஜனநாயக கட்சி வெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதே நேரத்தில் 100 பேர் இருக்கும் செனட் சபையில், குடியரசுக் கட்சி பெரும்பான்மை பெற்றிருப்பதாகவும், இண்டியானா மற்றும் வடக்கு டகோடா மாகாணங்களில் ஜனநாயக கட்சியை, குடியரசுக் கட்சி வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளதாகவும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி தெரிவிக்கின்றன.

எனினும் தென்னஸி மற்றும் டெக்சாஸ் மாகாணங்களில் தொடர்ந்து இழுபறியான நிலை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

ஆளுநர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் நடைபெற்று முடிந்த அமெரிக்க இடைத் தேர்தலில், ஜனநாயக கட்சி, பிரதிநிதிகள் சபையைக் கைப்பற்றியுள்ளது என்றும், குடியரசுக் கட்சி, செனட் சபையில் பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொண்டது எனவும் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

## ஊடகவியலாளர் ஜமாலின் உடல் எங்கேயென சவுதி உரிய தெளிவுபடுத்தலை முன்வைக்க வேண்டும்

### துருக்கி வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து

(அங்காரா)

துருக்கியில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் உடல் எங்கேயென சவுதி உரிய தெளிவுபடுத்தல்களை முன்வைக்க வேண்டுமென துருக்கிய வெளிவிவகார அமைச்சர் மெவ்லொட் கவுசோக்லு வலியுறுத்தியுள்ளார்.

ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள துருக்கி வெளிவிவகார அமைச்சர், டோக்கியோவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடக சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கஷோக்கியின் கொலை தொடர்பான பல தகவல்கள் துருக்கியிடம் உள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் மெவ்லோட் கவுசோக்லு, விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் அவை வெளியிடப்படுமென தெரிவித்தார்.

இதேவேளை, உரிய கட்டளைகள் இன்றி 15 பேர் கொண்ட குழுவொன்று துருக்கிக்கு வந்து ஒருவரை கொலை செய்துவிட்டு செல்ல சாத்தியமில்லை எனவும் தெரிவித்தார்.

இவ்விஜயத்தின்போது ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயை சந்தித்த துருக்கி வெளிவிவகார அமைச்சர், இரு நாடுகளின் உறவு தொடர்பாக 'கலந்துரையாடியிருந்தார்.

குறிப்பாக, சிரியாவில் மூன்று வருட காலமாக பணயக் கைதியாக தடுத்துவைக்கப்பட்டிருந்த ஜப்பான் ஊடகவியலாளர் ஒருவரை மீட்க துருக்கி உதவியிருந்த நிலையில், அதற்கு ஜப்பான் பிரதமர் நன்றியும் தெரிவித்தார். (7)

## ஈராக்கில் 200க்கும் அதிகமான மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிப்பு

### ஐ.நா. சபை அறிக்கை



(பக்தாத்)

ஈராக்கில் ஐ.எஸ்.பயங்கரவாதக் குழுவின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் ஆயிரக்கணக்கான சடலங்களைக் கொண்ட 200 க்கும் மேற்பட்ட மனிதப்புதைகுழிகள் ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இப்புதைகுழிகள் 12,000 வரையான சடலங்களைக் கொண்டிருக்கக்கூடுமென ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டில் ஈராக்கின் சிலபகுதிகளை கைப்பற்றிய ஐ.எஸ் குழு, அப்பகுதிகளில் மிகவும் கொடூரமான ஆட்சியை நடத்தியதுடன் தமக்கு எதிராக செயற்பட்ட அனைவரையும் கொன்று குவித்தது.

பின்னர் அமெரிக்காவின் ஆதரவுடன் ஈராக் அரசு முன்னெடுத்த தாக்குதல்களினால் ஐ.எஸ்.குழு தோற்கடிக்கப்பட்ட போதிலும்கூட இப்போதும் சில பகுதிகள் ஐ.எஸ் குழுவின் செயற்பாடுகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இப்புதைகுழிகள் மற்றும் சான்றுகள் அடங்கிய அறிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கு மட்டுமல்லாமல், போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை வழக்குகள் ஆகியவற்றை சட்டத்தரணிகள் முன்னெடுப்பதற்கு உதவுமென நம்பப்படுகிறது. (7)

## ன்கள் துப்பாக்கிச்சூடு;
## ார் உயிரிழப்பு

தொடர் தாக்குதல் இதுவாகும்.

இதுகுறித்து ஆப்கான் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தரப்பில், ஆப்கானிஸ்தானில் ஃபராஹ் நகரில் நேற்று இரவு தலிபான்கள் நடத்திய தாக்குதலில் பொலிஸார் 8 பேர் பலியாகினர். கடந்த திங்கட்கிழமை ஃபராஹ் நகரின் எல்லையோரத்தில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப் படை வீரர்கள் 20 பேர் பலியாகினர். 20 பேர் கடத்தப்பட்டனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலிபான்கள் ஆதிக்கம்

ஆப்கானிஸ்தானில் அரசுப் படைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அரசுப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்க கூட்டுப்படையும் அங்கு முகாமிட்டுள்ளன.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் தலிபான் அமைப்பைச் சேர்ந்த தற்கொலைப் படைத் தீவிரவாதி தலைநகர் காபூலில் வெடிகுண்டுகள் நிரப்பிய அம்புலன்ஸை வெடிக்கச் செய்ததில் 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அண்மைக்காலமாக தலிபான்களின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த மூன்று வருடங்களில் தலிபான்களின் ஆதிக்கம் ஆப்கானிஸ்தானில் அதிகரித்து வருவதாக அமெரிக்கா அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (7)

## வடகொரியா - கியூபா நல்லுறவுப்பாலம்



(பியாங்யாங்)

வடகொரியாவில் நடைபெற்ற 'ஒளிமயமான நாடு' என்ற பாரிய செயற்றிறன் நிகழ்வொன்றில் அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன் மற்றும் கியூப ஜனாதிபதி மிகுவெல் டயஸ் கனெல் ஆகியோர் இணைந்து பங்கேற்றனர்.

நல்லெண்ண விஜயமாக கியூப ஜனாதிபதி உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று வடகொரியாவிற்குச் சென்றுள்ளது.

இந்நிலையில், பியாங்யாங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த 'செயற்றிறன் நிகழ்வில் இருநாட்டு தலைவர்களும் பங்கேற்றதாக வடகொரிய அரச ஊடகமான கே.ஆர்.டி. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது. அது தொடர்பான காணொலியையும் வெளியிட்டுள்ளது.


இருநாட்டு கொடிகளையும் அசைத்தவாறு பல வண்ணமயமான நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றன. பார்ப்போரை கவரும் வகையில் மிகவும் பிரமாண்டமான வகையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வை பார்வையிட்ட இரு நாட்டு தலைவர்களும் கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதோடு, ஒருவரையொருவர் கட்டித்தழுவிக்கொண்டனர்.

வடகொரியாவும் கியூபாவும் கடந்த 1960ஆம் ஆண்டு முதல் இராஜதந்திர உறவுகளை பேணி வருகின்றன.

சோவியத் முறையிலான பொருளாதார முறைகளை கடைப்பிடிக்கும் உலகின் கடைசி இரு நாடுகளும் இவைதான்.

இந்நிலையில், இருநாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தும் வகையில் கியூப உயர்மட்ட விஜயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)



## ரமாண்ட சிலை
## தனமானது



# சபாநாயகரின் அறிவிப்புக்காக இராஜினாமா சிறுபிள்ளைத்தனம்

## முன்னாள் அமைச்சர் யாப்பா காட்டம்



(கொழும்பு)

சபாநாயகரின் அரசியலமைப்பை மீறிய அறிவிப்புக்காக இராஜினாமா செய்வதென்பது சிறுபிள்ளைத்தனம் மாத்திரமல்ல, வெட்கப்படவேண்டிய விடயமென்று முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். அரசியலமைப்பினூடாக தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமையவே ஜனாதிபதி செயற்பட்டுள்ளார். பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் உள்ளதென்றும் அநுர தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தில் மனுஷ நாணயக்கார அமைச்சு பதவி ஒன்றை ஏற்றார். அந்த நேரத்தில் ஜனாதிபதிக்கு அரசியலமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரம் தொடர்பாக அவர் அறிந்திருக்கவில்லையா? திடீரென அவர் அமைச்சு பதவியை இராஜினாமா செய்திருக்கிறார். முழு நாடும் புதிய பிரதமர் நியமனத்தை அங்கீகரிக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் யூ.ஆர். டி.சில்வா, அரசியலமைப்பிற்கு உட்பட்டதாகவே பிரதமர் ஒருவரை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

சபாநாயகரின் அறிவிப்பு அரசியலமைப்பிற்கு முரணானது. அரசியலமைப்பின் 70 ஆவது சரத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கவும் கூட்டவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. பாராளுமன்றத்தை கூட்டும் திகதியை அறிவிக்கும் உரிமை ஜனாதிபதிக்குரியது. சாதாரணமாக பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டால் அதனை கூட்டுமாறு சபாநாயகரினால் கோரிக்கை விடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தனது இராஜினாமா தொடர்பில் மூன்று அம்சங்களை மனுஷ நாணயக்கார குறிப்பிட்டிருந்தார். பாராளுமன்றத்தை ஒத்திவைத்தது சட்டத்திற்கு முரண் எனவும் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளும் அரசியலமைப்பிற்கு மாற்றமானவை எனவும் 2015 ஜனவரி 5 இல் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு முரணானது எனவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் மனுஷ நாணயக்கார அரசியலமைப்பு தொடர்பில் எதுவித அறிவும் இன்றி இது தொடர்பில் கருத்து முன்வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாராளுமன்றப் பெரும்பான்மை குறித்து அரசிற்கு எந்தப் பிரச்சினையுமில்லை

## எஸ்.பி.திஸாநாயக்க கூறுகிறார்



(கொழும்பு)

பாராளுமன்ற பெரும்பான்மை தொடர்பாக மைத்திரி- மகிந்த அரசாங்கத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. 113க்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை புதிய அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

"எனினும் அரசாங்கத்தில் சேர்ந்து கொள்ள விரும்பும் சில பாராளுமன்ற உறுப்பினர்களை அவ்வாறு சேர்த்துக் கொள்வதில் எங்களுக்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன. கட்சித் தலைவர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் சில அமைப்புகளிடம் இருந்து வரும் சில எதிர்ப்புக்களே அவ்வாறான வர்களை சேர்த்துக் கொள்வதில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியிலிருந்து பலர் அரசாங்கத்தில் சேர விரும்புவதால் பாராளுமன்ற பெரும்பான்மையைப் பற்றி எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் அவர் தெரி வித்தார்.

இலங்கை அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களை சபாநாயகர் சவாலுக்குட்படுத்தி வரும் செயற்பாடு புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தீர்மானம் அரசியலமைப்புக்கு முரணானது என்று கூறும் எவரும் உச்ச நீதிமன்றத்துக்கு சென்று அது பற்றிய விளக்கத்தை கேட்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார். நாட்டின் பிரதமர் தான் அல்ல என்பது ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியும். அத்துடன் அரசியலமைப்பின் பிரகாரம் அவருக்கு வீடு உரித்தானது. எனினும் அவரது எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கட்சித் தலைவர் பொறுப்புகளை நிலைநிறுத்திக் கொள்ள அலரிமாளிகையில் இருந்து கொண்டு அவர் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார் என்று எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

தற்கால அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# அம்பாறையில் தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு







(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் 3 நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு, வயல்களும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

பொத்துவில், திருக்கோவில், லகுகல, பாணமை, அம்பாறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, நட்பிட்டிமுனை, நாவிதன்வெளி, மருதமுனை ஆகிய தாழ்ந்த பிரதேசங்களிலுள்ள மக்களின் குடியிருப்பு வீடுகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அநேகமான உள் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதோடு, உள்ளூர் போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. தாம்போதிகளிலும் வாய்க்கால்களிலும் நீர் பெருக்கெடுத்துள்ளன. தொடர்ச்சியான மழை பெய்து வருவதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதோடு பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

கடல் கொந்தளிப்பாக இருப்பதனால் அதிகமான மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் கடற்றொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. நன்னீர் மீன்பிடித் தொழிலும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளதுடன் அன்றாட தொழிலாளர்களின் நாளாந்த தொழில் நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன. கடல்மீன்களின் விலை அதிகரித்துக் காணப்படுவதுடன் மரக்கறிவகைகளின் விலைகளும் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

சில பிரதேசங்களில் வடிகான்கள் துப்புரவு செய்யப்படாமலுள்ளதால் மழை நீர் வடிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும் போக நெற் செய்கைக்காக விதைக்கப்பட்ட நெல் வயல்கள் நீரில் மூழ்கிக் காணப்படுவதால் வேளாண்மை நாற்றுகள் பாதிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மகிழ்ச்சிக்கு வழி

ஒருத்தர் ரொம்ப கவலையோட உக்கார்ந்திருந்தார்! "ஏங்க இப்படி கவலைப்பட்டுக்கிட்டு உக்காந்திருக்கீங்க"ன்னு கேட்டேன்.

அதுக்கு அவர் சொல்லுறார்...

''கவலைப்படாம இருக்கிறது எப்படி?''ன்னு யோசிச்சுப் பார்த்தேன்... ஒரு வழியும் தெரியலை...! அதுதான் இப்படி கவலைப்பட்டுக்கொண்டு உக்கார்ந்திருக்கிறேன் என்றார்!

கவலைப்படாமே இருக்கிறதுக்கு வழி தெரியாமலேயே கவலைப்பட்டிருக்கிற ரகம் இது! எப்பவும் சந்தோசமா இருக்கணும்! சௌகரியமா இருக்கணும்! பல பேரோட கவலை இது! ஒரு பல்கலைக்கழகத்துக்கே இந்த கவலை வந்துட்டுது! அப்புறம் என்ன...இதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பிச்சுட்டுது! எப்படி தெரியுமா? அந்த பல்கலைக்கழகத் திலே சமூக இயல் துறை ஒன்று இருந்தது! அது ஒரு திட்டத்தை போட்டுது! பல ஆயிரக்கணக்கான நபர்களைப் பேட்டி கண்டது!

"எப்பவும் நான் சந்தோசமாக இருக்கிறேன், எப்பவும் நான் கவலையோடுதான் இருக்கிறேன்!'' என்று இரண்டு விதமாகச் சொல்லுறவங் களும் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையிலே இந்த ஆராய்ச்சிக்கு உதவியா இருந்தாங்க ! எல்லாரையும் நுணுக்கமா ஆராய்ச்சி செய்து கடைசியிலே அவர்கள் செய்த முடிவு என்ன தெரியுமா? ''எல்லாருமே மனமகிழ்ச்சியோடு இந்த உலகத்திலே இருக்க முடியும்!

எல்லாருமே நிம்மதியா இருக்க முடியும்! இதுசாத்தியமான விடயம் தான் !" என்று அந்தப் பல்கலைக்கழகம் தீர்மானம் செய்தது. தீர்மானம் செய்ததோடு சரியா? இதுக்கென்று சொல்லி நமக்கெல்லாம் உபயோகப்படும் விதத்திலே ஒன்பது விதமான யோசனைகளை சொல்லியிருக்கு! எல்லாம் அனுபவபூர்மான அறிவுரைகள். அதிலே கொஞ்சம் உபயோகப்படுதா பார்க்கலாமே! முதல் விடயம் வெறுப்பு, சந்தேகம் இது இரண்டையும் சுத்தமா ஒதுக்கி வைத்துவிட வேண்டும்!

ஏதாவது ஒரு குறையை மனசுக்குள்ளே போட்டுக்கிட்டு அதையே பெரிசா நினைச்சுக்கொண்டு உக்கார்ந்திருக்கக் கூடாது! மனிதனுடைய மகிழ்ச்சியிலே 50 சதவீதத்தை சாப்பிடுறது இது தானாம் ! அப்புறம் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் மட்டுமே சிந்திக்கணும். கடந்த கால தவறுகள், தோல்விகள் இதை மனசுக்குள்ளே வைச்சுக்கவே கூடாது! போனவருடம் இறந்துபோன பாட்டியை நினைச்சு இப்ப அழுது கொண்டிருந்தா எப்படி?

மூன்றாவது விடயம்: மாற்ற முடியாத நிலை– சூழ்நிலை இதை நினைச்சு வேதனைப்பட்டு சக்தியையும் நேரத்தையும் வீணாக்க வேண்டாம்! நாய் வாலை நிமிர்த்தி பார்க்க வேணும் என்ற முயற்சி நமக்கு என்னத்துக்கு. அது அப்படியே இருந்திட்டு போகட்டுமே!அடுத்தது என்ன தெரியுமா?

எல்லாருடைய வாழ்க்கையிலேயும் பல பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யுது!அந்தப் பிரச்சினைகளை அடியோட நீக்க முடியாது.அதையெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு அந்தப் பிரச்சினையோட தோள் மேலேயே ஒருகையை போட்டுட்டுப் போக நாம பழகிக்கணும்!

கல்யாணமான நேயர்களுக்கு இது சொல்லித் தெரிய வேண்டியதில்லே!அவங்களுக்கா தெரியும்! நிராசையினாலே வாழ்வை பாழடிச்சிக்கக் கூடாது!, நிதர்சனங்களுக்கு அஞ்சி விலகி ஓடக்கூடாது!, ஆசைப்படறது அத்தனையும் நடக்கறதுமில்லை !, எதிர்பார்க்கறது அத்தனையும் நிறைவேறதும் இல்லே!அடுத்த பொயின்டுக்கு வருவோம்.

உணர்ச்சி வசப்பட்ட நிலையிலே உள்ளுர குமுறிக்கிட்டு தனியா இருக்கக்கூடாது. அது மாதிரி நேரத்துல நம்பகமான நண்பர்கள், இல்லேன்னா உறவினர்கள் இவங்களைத் தேடிக்கிட்டுப் போகணும்! அவங்களோட பேசிக்கிட்டிருக்கணும்!

அடுத்தது:

தாழ்வு மனப்பான்மை– தற்பெருமை இது ரெண்டுமே மன அமைதியைக் கெடுக்கும். தான் சொல்றது தான் சரின்னு நியாயப் படுத்தற குணத்தை விட்டுடணும்..

அடுத்த பொயின்ட் :

மனிதப் பண்புகள்– ஈவு இரக்கம்– தன்மானம்– நன்றி– விசுவாசம் இதையெல்லாம் கடைப்பிடிக்கணும்! மறந்துடக்கூடாது! அது மட்டுமில்ல... அவங்க அவங்களுக்கு ஆத்ம திருப்தி அளிக்கக்கூடிய செயல் எதுவோ அதுலே ஈடுபடணும்!

இப்ப... ஒரு அலுவலகத்திலே வேலை செஞ்சாக்கூட அலுவலகக் கடமைகள்– ஆத்ம திருப்திக்கான கடமைகள் இது ரெண்டையும் ஒழுங்காகச் செய்யிறவன்.... என்னைக்கும் சந்தோஷமா இருக்கான்.

அடுத்த பொயின்ட் :

தனக்காக எதுவும் அதிகமாக எதிர்பார்க்கக்கூடாது! என்னாலே எவ்வளவு முடியும்னு நினைச்சிக்கிட்டிருக்கிறதுக்கும் என்னால நிஜமா முடியறது எவ்வளவுங்கறதுக்கும் இடைவெளி அதிகமா இருந்தா மகிழ்ச்சி குறையும்! நம்மாலே எது முடியுமோ அதுக்குத் தகுந்த மாதிரி இலக்குகளை நிர்ணயிக்கணும்...

முப்பது கிலோ எடையை தூக்கிறதுக்கே மூச்சு வாங்குது! முன்னூறு கிலோவை தூக்குவேன் என்று என்னத்துக்கு வீணா சவால் விடணும்!

கடைசி பொயின்ட்:

சொந்த காரியங்கலை கவனிக்கிற அதே நேரத்துல வேறே சில நல்ல காரியங்கள்லேயும் கவனம் செலுத்தணும்! தன்னலவாதிகள் எப்பவும் மகிழ்ச்சியா இருக்கிறதில்லே! ஆனா உயர்ந்த பொது நல நோக்கமும் நல்ல பழக்கவழக்கமும் உள்ளவங்க எப்பவும் சந்தோஷமாவே இருக்காங்க! இது அனுபவ பூர்வமான உண்மை!

அது சரி... ஏதோ பல்கலைக்கழகம் ஆராய்ச்சிப்பண்ணி இவ்வளவும் சொல்லியிக்கு...

இதெல்லாம் நடைமுறைக்கு சரியா வருமான்னு யோசிக்க வேணாம்!

பல்லாயிரக்கணக்கான மக்களோட அனுபவம் இது! அனுபவத்தைத்தான் அவங்க தொகுத்துச் சொல்லியிருக்காங்க!

அதனாலே... முடிஞ்ச அளவுக்கு சந்தோஷமா இருக்கறதுக்கு நீங்களும் முயற்சி பண்ணுங்க..!

நானும் முயற்சி பண்றேன்...!

ஞாபகம் இருக்கட்டும்...

சந்தோஷமா இருக்கிறதுக்கு சில பொயின்ட் சொல்லியிருக்கேன்.

### ஸ்திரமற்ற நிலையில்

# பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது

## முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பாராளுமன்ற சபாநாயகர் விடுத்துள்ள அறிக்கையின் மூலம் பாராளுமன்றத்தில் அவருக்குள்ள பங்களிப்பின் சுதந்திரத் தன்மையை விட்டுக்கொ டுத்துள்ளதுடன் அரசியலமைப்பு அதிகாரத்துக்கு மேலாகவும் அதற்கு அப்பாலும் சென்றுள்ளார் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

"சபாநாயகர் அவ்வாறான ஒரு அறிக்கையை வெளியிட்டதையிட்டு எனக்கு கவலையாக உள்ளது" சபாநாயகரின் நிலைப்பாடு அரசியலமைப்பில் மதிக்கப்படும் வகையில் உள்ளது. தற்போதைய சபாநாயகர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் தெரிவானார். சபை உறுப்பினர்கள் அவரை சபாநாயகராகத் தெரிவு செய்தனர். பாராளுமன்ற அமர்வுகளின்போது சபையை நடத்திச் செல்வதே அவரது ஒரேயொரு பணி என்று அரசியலமைப்பு தெளிவாக விளக்குகிறது. அத்துடன் நடுநிலையான நபர் என்ற ரீதியிலேயே அவர் செயற்படுகிறார். அவர்தான் நடுவர். அதற்கு அப்பாலான பங்களிப்பு எதுவும் அவருக்கு இல்லை.

எந்தவொரு அரசாங்கத்தையும் அங்கீகரிக்கவோ அல்லது அங்கீகரிக்க முடியாத அதிகாரமோ சபாநாயகருக்கு இல்லை" என்று ' சரத் என். சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தலைமைத்துவத்தை வகிப்பவர் என்ற வகையில் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதி நியமிப்பவர்களை சபாநாயகர் அங்கீகரிக்க வேண்டும். அவர் எவராக இருப்பினும் அவரை சபாநாயகர் அங்கீகரித்தாக வேண்டும்"

"அதன் பின்னர் பாராளுமன்றத்தில் என்ன நடைபெறுகின்றது என்பது வேறு கதை. அதன்பிறகு அவர்கள் நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தலாம். ஆனால் அதுவரை சபாநாயகர் அதிகாரத்தின் மூலம் தனக்கு வழங்கப்பீட்ட பங்கினையே செயற்படுத்த வேண்டும்.

ஆனால் இப்போது அவர் ஒருசில வீரர்களின் பேச்சை மட்டும் கேட்கும் நடுவரைப் போல் விளையாடிக் கொண்டிருக்கிறார்.

சட்டசபை என்பது சபாநாயகர் அவரது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதைப்போல் 'மனச்சாட்சி' என்ற விவகாரம் அல்ல. முன்னர் அவர் அவரது மனச்சாட்சியின்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு மாறிச் சென்று அமைச்சுப் பதவியொன்றை பெற்றுக்கொண்டார். அதன் பின் அவரது மனச்சாட்சியின்படி திரும்பி வந்தார். ஆனால் இந்த விடயத்தில் அவர் அவரது மனச்சாட்சியின்படி செயற்பட முடியாது. அவரது பணி பாராளுமன்றத்தில் நடுநிலை வகித்து செயற்படுவதேயாகும். அவர் எந்தப் பக்கத்தையாவது எடுப்பதாக இருக்கும் அந்த சந்தர்ப்பம் முதல் அவருக்கு பாராளுமன்றத்தை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளமுடியாமற்போகும்

116 பாராளுமன்ற உறுப்பினர்களின் கடிதத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, அவர் நடுநிலைப் பங்களிப்பில் இருந்து தவறிவிட்டார். பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கடிதங்களை சபாநாயகர் பெற்றுக்கொள்வதை அரசியலமைப்பு அனுமதிக்கவில்லை. குறிப்பாக பாராளுமன்ற அமர்வுகளுக்கு வெளியே அவ்வாறு அவர் கடிதத்தைப் பெற்றுக்கொண்டது அவர் பக்கச் சார்பானவர் என்ற அபிப்பிராயத்தை தருகிறது."

தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வாக ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தலுக்கு சென்று யாருக்கு ஆட்சி அதிகாரம் இருக்கிறது என்பதை தீர்மானிக்க வேண்டும்.

"அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் 70ஆவது சரத்தின்படி பாராளுமன்றம் 4.5 வருடங்களின் பின்னரே கலைக்கப்பட முடியும் என்று திருத்தப்பட்டுள்ளது. அத்துடன் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் வேண்டும்.

அத்துடன், ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை உடையவர் என்று கூறும் 33ஆவது சரத்து ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கூட்டும், ஒத்தி வைக்கும் மற்றும் கலைக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது."



19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் 2002 இல் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை சர்வஜன வாக்கெடுப்பு இன்றி கலைக்க முடியாது என்ற வகையில் அறிமுகப்படுத்திய திருத்தத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. பாராளுமன்ற கலைப்பு என்பது எப்போதுமே நிறைவேற்று அதிகாரமாக இருந்துள்ளது. அதனை சர்வஜன வாக்கெடுப்பு இன்றி இல்லாமலாக்க முடியாது. .

எனவே 33ஆவது ஷரத்து தற்போதைய 19ஆவது திருத்த சட்டத்தில் உள்ளடக்க வேண்டியதாயிற்று. அல்லாவிட்டால் 19ஆவது திருத்த சட்டத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்பட் டிருக்கும். ஜனாதிபதிக்கு எந்த அதி காரம் இருக்கிறது. அது தேவைப்படும் சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே அதனை பயன்படுத்த வேண்டும். அது மக்களுக்கும் நாட்டுக்கும் தேவைப்படும் போது, ஸ்திரமற்ற நிலையில் உள்ள பாராளுமன்றம் கலைக்கப்படலாம்" என்று முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவை சந்திக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை-ஸ்ரீநேசன்

(ஏறாவூர்)

நான் கொள்கைக்கும், நீதிக்கும் தலை வணங்குபவன். ஒரு போதும் மாற்றுக் கட்சிக்கு தாவமாட்டேன். கட்சியின் முடிவுக்கு மாறாகவும் நடக்கப் போவதில்லை. கட்சி மாறுவதென்பது செல்வாக்கை விலைபேசி விற்பதற்குச் சமனானது. நான் மகிந்தவை சந்திக்க வேண்டிய அவசியமில்லை என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

நாட்டின் அரசியல் நிலவரமானது ஆள்பிடிக்கும் படலத்தில் மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்ட முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினராக எனது மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். நான் நீண்டகாலம் கல்விப் பகுதியில் ஆசிரியனாக, விரிவுரையாளனாக, பணிப்பாளராக சேவை செய்தவன்.

அரசியலுக்கு அப்பால் எனக்கென மக்கள் கூட்டமொன்று இருக்கிறது. நான் தேர்தலுக்கு செலவு செய்த பணமோ மற்றையவர்களை விட வெகு குறைவு. அந்தளவுக்க எனக்கு மக்கள் செல்வாக்கு இருந்தது. அந்த மக்களை நான் உளமார நேசித்து வருகிறேன்.

எனவே பதவி மோகமோ கோடிக்கணக் கான பண மோகமோ ஏற்படமாட்டாது. இதைவிட எனது பரம்பரைக்கான செல்வாக்கும் இருக்கிறது. இவைகளைத்தாண்டி நான் ஒரு போதும் மாற்றுக் கட்சிக்கு போகமாட்டேன். கட்சி மாறுவதென்பது செல்வாக்கை விலைபேசி விற்பதற்குச் சமனானது.

மகிந்த என்னைச் சந்திக்க விரும்புவதாகவும் என்னை வருமாறும் என்னைச் சந்தித்தவர்கள் கேட்டுக் கொண்டார்கள். திடீரென மகிந்தவுக்கு என்மீது பாசம் ஏற்பட்டதற்கான காரணம் எமது மக்களுக்கு தெரியாமலா போகும். மகிந்த என்னைச் சந்திப்பதற்கு முதல் கட்சித் தலைமையைச் சந்தித்து தனது கோரிக்கையை முன் வைத்தார்" அப்போது சம்பந்தனும் தமிழினத்தின் கோரிக்கையை அவருக்கு முன்வைத்தார்" இது நாகரிகமானது. வெளிப்படைத் தன்மையானது. இரு வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் நடந்து கொள்ளும் பண்பாடு இப்படித்தான் இருக்கவேண்டும்.

அம்பாறையில் இருந்து மட்டக்களப்புக்கு வந்து, முழு அமைச்சுப் பதவியும், கோடி கோடியான பணமும் தருவதாக கூறுவது ஒரு அரசியல் நாகரிகமாக தெரியவில்லை. சில வேளைகளில் என்னைச் சந்தித்தவர்களுக்கு அப்படி பேசும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கலாம். எது எப்படியிருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில் எனது மக்கள் கூட்டம் எனக்குத் தந்த கௌரவத்தை நான் விலைபேசி விற்கமாட்டேன். அப்படி விலைபேசி விற்பது எனது மக்களுக்கு நானே நஞ்சூட்டுவதற்க ஒப்பானது. ஸ்ரீநேசன் ஒருபோதும் கௌரவத்தை இழக்கமாட்டான் என வந்தவர்களுக்கு தெளிவாக கூறினேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கம்பன் கழகம் நடத்தும் திருக்குறள் மனனப் போட்டி

அகில இலங்கைக் கம்பன்கழகம் ஆண்டுதோறும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமாகக் கம்பன் விழாக்களை நடத்தி வருகிறது. அவ்விழாக்களின் வரிசையில் 2019 ஆம் ஆண்டுக்கான கொழும்புக் கம்பன் விழாவினை எதிர் வரும் பெப்ரவரி மாதம் நடத்தவுள்ளது. இவ்விழாவை முன்னிட்டு நாவலர் நற்பணி மன்றத் தலைவர் என். கருணையானந்தனின் அனுசரணையுடன் நடத்தப்படும் திருக்குறள் மனனப் போட்டிக் கான விபரங்களைக் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

இப்போட்டி இருபிரிவுகளாக நடைபெறும். பாலர் பிரிவில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவர்களும் கீழ்ப் பிரிவில் தரம் 6 முதல் 8 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களும் கலந்து கொள்ளலாம். பாலர் பிரிவில் கலந்து கொள்வோர் குறிப்பிட்ட ஐந்து அதிகாரங்களை (50 குறள்கள்) மனனம் செய்தல் வேண்டும். கீழ்ப் பிரிவில் கலந்து கொள்வோர் குறிப்பிட்ட பத்து அதிகாரங்களை (100 குறள்கள்) மனனம் செய்வதோடு அக்குறள்களுக்கான பொருளறிவையும் பெற்றிருத்தல் வேண்டும்.

மனனம் செய்யவேண்டிய அதிகாரங்கள்

பாலர் பிரிவு

அன்புடைமை (8ஆம் அதிகாரம்), விருந்தோம்பல் (9ஆம் அதிகாரம்), இனியவை கூறல் (10ஆம் அதிகாரம்), செய்ந்நன்றி அறிதல் (11ஆம் அதிகாரம்), நடுவுநிலைமை (12ஆம் அதிகாரம்)

குறிப்பு: மேலே தரப்பட்டுள்ள அதிகாரங்களிலுள்ள குறள்கள் 50ஐயும் மாணவர்கள் மனப்பாடம் செய்திருந்தால் போதுமானது.

கீழ்ப் பிரிவு

பிறன் இல் விழையாமை (15ஆம் அதிகாரம்), பொறை உடைமை (16ஆம் அதிகாரம்), அழுக்காறாமை (17ஆம் அதிகாரம்), வெஃகாமை (18ஆம் அதிகாரம்), புறங்கூறாமை (19ஆம் அதிகாரம்), பயனில சொல்லாமை (20 ஆம் அதிகாரம்), தீவினை அச்சம் (21ஆம் அதிகாரம்), ஒப்புரவு அறிதல் (22ஆம் அதிகாரம்), ஈகை (23ஆம் அதிகாரம்), புகழ் (24ஆம் அதிகாரம்)

குறிப்பு: மேலே தரப்பட்டுள்ள அதிகாரங்களிலுள்ள குறள்கள் 100ஐயும் அவற்றுக்கான பொருளையும் மாணவர்கள் மனப்பாடம் செய்திருக்கவேண்டும்.

மேற்படி திருக்குறள் மனனப்போட்டியில்கலந்துகொள்ள விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப் பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப் பெயர், வயது, பிறந்ததிகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர், ஆகியவற்றைக் குறிப்பதோடு தாம் கலந்து கொள்ளவுள்ள போட்டி விபரங்களையும் குறிப்பிட்டு, இல. 12, இராமகிருஷ்ண கார்டன், கொழும்பு - 6 (Secretary, Colombo Kamban Kazhakam, 12, Ramakrishna Garden, Colombo - 06.) எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் மேற்பக்கத்தில் போட்டியாளர் விண்ணப்பிக்கும் போட்டி விபரத்தையும் எழுதுதல் வேண்டும். 2018 டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். போட்டி நடைபெறும் திகதி போட்டி யாளர்களுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படும். பாடசாலை மாணவர்களது விண்ணப்பங்களைத் தனித்தோ, தமிழ் மன்றங்களின் ஊடாக ஒரே தொகுதியாகவோ அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கலாம்.

தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும் எனவும் பேச்சுப் போட்டியில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது. (இ-7)

# கொழும்புக் கம்பன் கழகம் நடத்தும் 2019 கம்பன் விழாவுக்கான அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த பேச்சுப் போட்டி அமரர் பொன். பாலசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப் போட்டி

(கொழும்பு)

அகில இலங்கைக் கம்பன்கழகம் ஆண்டுதோறும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமாகக் கம்பன் விழாக்களை நடத்தி வருகிறது. அவ்விழாக்களின் வரிசையில் 2019 ஆம் ஆண்டுக்கான கொழும்புக் கம்பன் விழாவினை எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடத்தவுள்ளது. இவ் விழாவை முன்னிட்டுக் கழகம் ஆண்டுதோறும் நடத்திவரும் அமரர் துரைவிஸ்வநாதன் ஞாபகார்த்தப் பேச்சுப போட்டி, அமரர் பொன். பாலசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப் போட்டி என்பவை பற்றிய விபரங்களைக் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

மேற்படி பேச்சுப் போட்டி 02 பிரிவுகளாக இடம் பெறவுள்ளது. மத்திய பிரிவுப் போட்டிகளில் 13-16 வயதுக்குட்பட்ட மாணவர்களும், மேற்பிரிவு போட்டிகளில் 17-30 வயதிற்குட்பட்ட போட்டியாளர்களும் கலந்து கொள்ளலாம். கவிதைப் போட்டி ஒரே பிரிவாக மட்டுமே இடம்பெறும். இதில் 15-30 வயதிற் குட்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாம். ஏலவே இப்போட்டிகளில் கலந்து தங்கப்பதக்கப் பரிசில்களைப் பெற்றோர் தவிர்ந்த, மற்றையோர் மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

போட்டியாளர்கள் சுயமாகத்தயாரிக்கப்பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப் பெயர், வயது, பிறந்த திகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பதோடு தாம் கலந்து கொள்ளவுள்ள போட்டி விபரங்களையும் குறிப்பிட்டு, இல. 12, இராமகிருஷ்ண கார்டன், கொழும்பு - 6 (Secretary, Colombo Kamban Kazhakam, 12, Ramakrishna Garden, Colombo - 06.) எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். கடித உறையின் மேற்பக்கத்தில் போட்டியாளர் விண்ணப்பிக்கும் போட்டி விபரத்தையும் எழுதுதல் வேண்டும். 2018 டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். விரும்பினால் ஒருவரே இரண்டு போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம். போட்டி நடைபெறும் திகதி போட்டியாளர்களுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படும்.

பாடசாலை மாணவர்களது விண்ணப்பங்களைத் தனித்தோ, தமிழ் மன்றங்களின் ஊடாக ஒரே தொகுதியாகவோ அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கலாம்.

பேச்சு மற்றும் கவிதை போட்டிகளில் கலந்து கொள்வோர் உடன் தரப்படும் தலைப்புகளில் தம் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். தலைப்புக்கள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும்.

தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப் பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும் எனவும் போட்டிகளில் இயல்பாளுமையை, வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.(இ-7)

# பிரதியமைச்சர் பதவியைத் துறந்த மனுஷ சிங்கப்பூருக்குப் பறந்தார்

(கொழும்பு)

தனது பிரதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்த மனுஷ நாணயக்கார சிங்கப்பூருக்குப் புறப்பட்டு சென்றுள்ளார்.



நேற்று முன்தினம்காலை அவர் சிங்கப்பூருக்குச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்த மனுஷ நாணயக்கார, சபாநாயகரின் அறிக்கையின்படி தாம் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக ஏற்பதாக தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 9 விதி எண் 4


செவ்வாய், இராகு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் பேச்சில் இணையற்றவர்கள். பேசியே காரியம் சாதிக்கும் சாமர்த்தியசாலிகள், ஜனவசியமுள்ளவர்கள். குரு பக்தியும் இறை பக்தியும் மிக்கவர்கள். பிறர் செய்ய முடியாத காரியத்தைச் செய்து முடித்து விடுவார்கள். சாதனைகள் செய்வார்கள். பேச்சில் கண்டிப்பும் கடுமையும் இருக்கும். தேசப் பற்று மிக்கவர்கள். சுற்றுலாப் பிரியர்கள். எதையும் வருமுன் யூகித்தறியும் ஆற்றல் மிக்கவர்கள். இரகசிய அறிவு உடையவர்கள். பிறருடைய இரகசியம் அறிய முற்படுவார்கள். பாதுகாப்பு பலமிக்கவர்கள். பேசியே காரியம் சாதிப்பார்கள்.

பலருக்கு உதவிகள் செய்வதன் மூலம் பல்வேறு மனிதர்களின் ஆதரவுகள் கிடைக்கும். கடுமையாக பேச வேண்டிய இடத்தில் கடுமையாகப் பேசி அமைதியாக இருக்க வேண்டிய இடத்தில் அமைதியாக இருந்து மரியாதை கொடுக்க வேண்டிய இடத்தில் மரியாதை கொடுப்பது போல நடித்துக் காரியங்கள் சாதித்துக் கொள்வதில் வல்லவர்கள். இவர்களின் சிந்தனை மின்னல் வேகத்தில் செல்லும். ஒரு மனிதனைப் பார்த்தவுடன் எதற்காகத் தம்மிடம் வந்துள்ளான் என்பதை எடைபோட்டு விடுவார்கள். தடித்த குரலில் பேசும் இவர்களின் மனம் இளகியதே. 9 ஆம் எண்காரர்களில் பிறருக்கு உதவும் எண்ணம் இவர்களுக்கு அதிகமாக இருக்கும். கம்பீரமான தோற்றமுடையவர்கள்.

இலாப நஷ்டத்தை விட தான் நினைத்த காரியத்தை முடிப்பதிலேயே குறியாக இருப்பார்கள். எல்லாத் துறைகளைப் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். இவ்வெண் ஆதிக்கம் நன்கு அமையப் பெற்றவர்கள் பிறருடைய துயரத்தைப் போக்குவார்கள். எதிர்ப் படைகள் மீது குண்டுகள் வீசி தன்னுடைய நாட்டைக் காப்பார்கள். தேசத்தின் மானம் காப்பார்கள். சீர்திருத்தக் கொள்கைகளை உடையவர்கள். கவலைகளை அதிகமாகச் சந்திக்கக் கூடியவர்கள். தன்னுடைய இலட்சியங்களை அடிமனதில் ஆழமாக வைத்திருப்பார்கள். வாழ்க்கையில் மாறி மாறிப் போராட்டங்கள் வரும்.

எதிர்பாராத ஆபத்துக்கள் பக்கத்தில் வந்து நீங்கும். மயிரிழையில் தப்பியவர்கள் என்றால் இவர்கள்தான். இவர்களுக்குக் காரியத் தடைகள் இருந்து கொண்டேயிருக்கும். கடும் முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். உலக அனுபவம் அதிகம் பெற்றவர்கள். சில நேரங்களில் வஞ்சக மனிதர்களாலும் சூழ்ச்சி நிறைந்த மனிதர்களாலும் சூழ்ந்திருக்கும் வாழ்க்கை வாழ்வார்கள். அவர்கள் இவர்களைச் சமய சந்தர்ப்பம் பார்த்துக் காலைவாரிவிடத் தயாராக இருப்பார்கள். இருப்பினும் சமயோசித புத்தியுடையவர்கள். தப்பித்துக் கொள்வார்கள். இவர்களின் குணத்தால் சூழ்ச்சி மிகுந்தவர்கள் மத்தியில் வாழ வேண்டி வரும். இருப்பினும் வெற்றி இவர்கள் பக்கம்தான். பொறுமை காத்தால் வெற்றிகள் உண்டாகும்.

நிதானத்தைக் கடைப்பிடிக்கவில்லையென்றால் மறைமுக எதிரிகள் தாக்குவார்கள். இளமைக்காலம் பலவித போராட்டத்துடன் காணப்படும். பலவித இன்னல்களுக்கு ஆளாவார்கள். பருவ வயது முதல் அதிர்ஷ்டம் ஆரம்பித்து பாதி




வயதிற்குப் பின்னர் நீடித்த அதிர்ஷ்டம் உண்டாகும். வெற்றி தோல்வி என்பது இவர்களுக்கு மிகவும் சகஜம். எப்பேர்ப்பட்ட சோதனைகள் வந்தாலும் எதிர்கொள்ளும் திறமையும் மனவலிமையும் இருக்கும். தற்புகழ்ச்சிக்கு மயங்குவார்கள். இயல், இசை, நாடகம் போன்றவற்றில் ஆர்வம் உடையவர்கள். தெய்வீக சங்கீதத்தில் மனம் உருகிவிடுவார்கள். ஒருவித வரட்டுப் பிடிவாத குணமிருக்கும். தன் சொல்லும் செயலுமே சரியென்று வாதாடுவார்கள். சமுதாயத்தில் முக்கியமான நபராக இருப்பார்கள்.

பேச்சும் எழுத்தும் உலகையே உலுக்கக்கூடியதாக இருக்கும். நண்பர்களிடம் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வார்கள். தன்னம்பிக்கையும் துணிச்சலும் மிக்கவர்கள். சில நேரத்தில் அவசரமாகக் களத்தில் குதிப்பார்கள். நேர்மை, பாசமுடையவர்கள். நட்புக்கும் பாசத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். நகைச்சுவை உணர்ச்சி உடையவர்கள். புன்னகையுடன் கூடிய முகமிருக்கும். எதார்த்தவாதிகள். தன்னை நம்பியவருக்கு எல்லா உதவிகளையும் செய்வார்கள்.

தெளிவான சுய சிந்தனையிருக்கும். பொதுவாழ்க்கையில் பிரகாசிப்பார்கள். அதிகமாக உணர்ச்சி வசப்பட்க் கூடியவர்கள். பிரச்சினைகளில் சிக்கித் தவிப்பார்கள். சினிமா, பொறியியல், மருத்துவம், தத்துவம், ஜோதிடம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவார்கள். அழகை மிகவும் நேசிப்பார்கள். நட்புக்கு இலக்கணமாகத் திகழ்வார்கள். வாதம் செய்வதில் வல்லவர்கள். இரகசியம் காப்பார்கள்.

தீவிரமான கொள்கையுடையவர்கள். யாருக்கும் அடிபணிய மாட்டார்கள். தேசம் காக்கத் தியாகம் செய்வார்கள். காமம் அதிகரிக்கும். இவ்வெண் பெண்கள் வீண் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வார்கள். தவறுகளை மறைத்து வாழ்க்கை நடத்துவார்கள். மிரட்டல் குணமிருக்கும். தான் சொல்வது போல நடக்கமாட்டார்கள். வீண் சவால்கள் செய்வார்கள். இணைபிரியாத நண்பர்கள் பலபேர் இருப்பார்கள். இவர்கள் உணர்ச்சிவசப்படுவதால் பல துன்பங்களுக்கு ஆளாவார்கள். தன்னுடைய நிலையை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1,10,19,28,5,14,23,6,15,24,9,18,27.

**துரதிர்ஷ்ட திகதிகள்**

8,17,26,2,11,20,29,4,13,22,31.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர்நீலம், மஞ்சள், பொன்னிறம், சிவப்பு நிறம், நீலம், சந்தனம்.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**

கறுப்பு, பச்சை, இருண்ட நிறங்கள்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

கோமேதகம், நீலக்கல், பவளம், அக்கோமரின், கார்னட், ப்ளட்ஸ்டோன், ஓபல்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

91



“1656 இல் கொழும்பு டச்சுக்காரரினால் கைப்பற்றப்பட்ட தன் விளைவாக அவர்கள் உட னடியாக மன்னாரிலும் யாழ்ப்பாணத்தின் மீதும் படையெடுப்பார்கள் எனப் போர்த்துக்கீசர் எதிர்பார்த்தனர். ஆனால் டச்சுக்காரர் தெற்கிலும் தென்மேற்கிலும் தமது நிலைப் பாட்டை ஒருமுகப்படுத்துவதில் கவனம் செலுத்தினர்”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

டச்சுக்காரர் மேற்படி பிரதேசங்களைக் கைப்பற்றி அங்கு தமது பாரிய கோட்டைகளையும் படைகளையும் நிர்வாக அமைப்புக்களையும் ஏற்படுத்தியதுடன் அப்பிரதேசங்களில் தமது வர்த்தக ஏகபோக உரிமையை மிக இறுக்கமாக நடைமுறைப் படுத்தியும் புரட்டஸ்தாந்து மதத்தைத் தீவிரமாகப் பரப்பியும் தமது நீண்டகாலக் கனவை நனவாக்கினர்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பாக நடைபெற்ற மேற்படி வரலாற்று நிகழ்விலிருந்து இன்றுவரை இலங்கை அரசியல் தலைவர்கள் எதுவித பாடங்களும் கற்றுக்கொள்ளாத துர்ப்பாக்கியமான அரசியல் நிலைமை இந்த நிமிடம் வரை எத்தனையோ அப்பாவி உயிர்களையும் தேசத்தின் செல்வங்களையும் அழித்து ஒழிக்கக் காரணமாயிருந்தது.

வரலாற்று நிகழ்வுகளை வெறும் சம்பவங்களாக மட்டும்• கருத்திற்கொள்ளாது அவ்வரலாற்று நிகழ்வுகளிலிருந்தும் அனுபவங்களிலிருந்தும் மனிதன் அறிவியல்பூர்வமாகச் சிந்தித்து பாடங்கற்று அவற்றைத் தூர நோக்கோடு செயற்படுத்தாத வரை அவ்வரலாற்று நிகழ்வுகள் வெறும் ஏட்டுச் சுரைக் காயாகவே அமைந்துவிடுகின்றன.

தெற்கிலுள்ள கண்டி இராச்சிய மன்னர்களுடன் டச்சுக்காரர் மேற்கொண்ட உடன்படிக்கைகளும் நடத்திய போராட்டங்களும் இவ் ஆய்வின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டவை.

அது போன்றே தென்மேற்குப் பகுதியில் கொழும்பு அல்லது கோட்டைப் பிரதேசங்களில் போர்த்துக்கீசருக்கும் டச்சுக்காரருக்கும் இடையே ஏற்பட்ட போராட்டங்களும் நடவடிக்கைகளும் இவ்வாய்வின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டன.

எனவே இவ்வாய்வின் நோக்கத்திற்கு இணங்க, தமிழ்ப் பிரதேசங்களாகிய வடக்கு, வடமேற்குப் பிரதேசங்களிலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் வடகிழக்குப் பிரதேசங்களிலும் எவ்வாறு டச்சுக்காரர் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டினார்கள் என்றும் அப்பிரதேசங்களில் எவ்வாறான ஒரு நிர்வாக அமைப்பு முறையை நடைமுறைப்படுத்த தனது வர்த்தக நோக்கங்களை நிறைவேற்றிச் செல்வம் குவித்தார்கள் என்பது பற்றியும் மேலும் இப்பிரதேசங்களில் எவ்வாறு தமது புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்பினார்கள் என்பது பற்றியும் இவ் அத்தியாயத்திற் கருத்திற் கொள்ளப்படும்.

முதலில் மேற்படி பிரதேசங்களைப் போர்த்துக்கீசரிடமிருந்து பறித்துத் தமது ஆதிக்கத்தை டச்சுக்காரர் எவ்வாறு ஏற்படுத்தினார்கள் என்று நோக்குவது பொருத்தமானதாகும்.

1638 இல் டச்சுக்காரர் கண்டி மன்னன் இராசசிங்கனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி கறுவா வர்த்தக ஏகபோக உரிமையைப் பெற்றிருந்தனர்.

தென்பகுதி, தென்மேற்குப் பிரதேசங்களில் உள்ள கரையோரங்களில் தமது பாதுகாப்பு அரண்களை அமைத்து அதனை அண்மித்துள்ள கண்டி இராச்சியப் பகுதிகளின் கீழுள்ள கறுவா விளையும் உள்ளூர்ப் பிரதேசங்களில் தமது கறுவா உற்பத்தி நடவடிக்கைகளிலும் அதன் ஏகபோக வர்த்தகத்திலும் தமது ஆரம்ப முயற்சியைத் தொடங்கியிருந்தனர்.

1644களிலிருந்து மாத்தளைப் பிரதேசங்களாகிய களுகோறளை, தொளஸ்தல், கோறளை, மொறவா கோறளை ஆகிய பிரதேசங்களில் கறுவாவைப் பெற்று தமது வர்த்தக நடவடிக்கையைத் தொடங்கினர்.

1656 இல் டச்சுக்காரர் கொழும்பை போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றினர். இதனால் இலங்கையின் தென்மேற்குப் பகுதிகளும் டச்சுக்காரரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தன.

இதன் விளைவாக டச்சுக்காரர் தமது வர்த்தக நடவடிக்கைகளை மிகவும் திட்டமிட்ட முறையில் முடுக்கிவிட நல்லதொரு வாய்ப்பைப் பெற்றனர். கொழும்பு கைப்பற்றப்பட்டு அங்கு டச்சுக்காரர் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வு இலங்கையில் அவர்களது நிரந்தர இருக்கையை உறுதிப்படுத்தியது.

1656 இல் கொழும்பு டச்சுக்காரரினால் கைப்பற்றப்பட்டதன் விளைவாக அவர்கள் உடனடியாக மன்னாரிலும் யாழ்ப்பாணத்தின் மீதும் படையெடுப்பார்கள் எனப் போர்த்துக்கீசர் எதிர்பார்த்தனர்.

ஆனால் டச்சுக்காரர் தெற்கிலும் தென்மேற்கிலும் தமது நிலைப்பாட்டை ஒருமுகப்படுத்துவதில் கவனம் செலுத்தினர்.

அதனை வெற்றிகரமாக நிறைவேற்றிய பின்னர் 18 மாசி 1658 இல் தளபதி வான் கோன்ஸ் (Rijcklof Van Goens) தலைமையில் 12 கப்பல்களிலும் 30 படகுகளிலும் 1100 டச்சுப் போர் வீரர்களுடனும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கூலிப்படையினருடனும் டச்சுக்காரர் மன்னாரில் வந்து தரையிறங்கினர்.

22 மாசி 1658 இல் மன்னார் டச்சுக்காரர் வசமாகியது. போர்த்துக்கீசர் டச்சுக்காரரிடம் சரணடைந்தனர். போர்த்துக்கீசரின் ஆயுதங்கள் யாவும் களையப்பட்டன.

போர்த்துக்கீசர் கேட்டுக்கொண்டதன்படி திருமணமாகாத போர்த்துக்கீசப் போர்வீரர்களைப் போர்த்துக்கல் செல்ல வான்கோன்ஸ் அனுமதி வழங்கினான்.

ஏனைய போர்த்துக்கீசப் போர்வீரர்கள் கொழும்புக்கும் கோவாவிற்கும் அனுப்பப்பட்டனர்.

தளபதி வான்கோன்ஸ் மன்னாரையும் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றுவதற்கு தைமாதம் 1658 இல் திட்டமிட்டிருந்தான் என்பதனையும் இவ்விரு பிரதேசங்களையும் கைப்பற்றுவதற்கான காரணத்தையும் பின்வருமாறு தனது அறிக்கையில் குறிப்பிடுகிறான்.

இலங்கைத் தீவில் எதிரியின் வசமுள்ள பகுதிகளைக் கம்பனியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல். அதேவேளை போர்த்துக்கீசரை இங்கிருந்து வெளியேற்றி கடவுளின் உண்மையான திருச்சபையை இங்கு நிலை நிறுத்தல்.

(தொடரும்)

# ஆட்சிக்கவிழ்ப்பு எதிரொலி

# கொழும்பு கொள்கலன் முனையம் குறித்த இந்தியாவுடனான பேச்சுக்களில் இழுபறி!

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பினால், கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக, இந்தியாவுடன் நடத்தப்படவிருந்த பேச்சுக்களில் இழுபறி ஏற்பட்டுள்ளது.**

கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்வது தொடர்பாக கடந்த 2017 ஏப்ரல் மாதம் புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுக்கும் சுஸ்மா சுவராஜ்க்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் விரும்பிய போதும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சரான மகிந்த சமரசிங்கவும் அதனை எதிர்த்தனர்.

இதனால், இழுபறிகள் ஏற்பட்டிருந்தன. ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை பதவி நீக்கப்படுவதற்கு முன்னர்- கடைசியாக நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது, இதுகுறித்து இந்தியாவுடன் பேசி முடிவெடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போதைய அரசியல் நெருக்கடிகளால், திட்டமிட்டபடி இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்த முடியவில்லை என்று துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சரான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட்ட பின்னர், இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவுடன், இதுபற்றித் தாம் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2017 இல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு இந்த விடயங்களை உள்ளடக்கியுள்ளதாக ஐ.தே.க. தவறாக ஏற்றுக் கொண்ட போதிலும், அதனை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளாது என்றும் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, கொழும்பு மேற்கு கொள்கலன் முனையத்தில் இந்தியாவின் முதலீட்டை ஏற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கிறார் என்றும் சமரசிங்க தெரிவித்தார். (இ-7)

# விமான நிலையத்தில் குடிவரவு,குடியகல்வு அலுவலகத்தின் செயற்பாடுகள் முடக்கம்




(கொழும்பு)

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் திடீர் மின்சார தடை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகத்தில் செயற்பாடுகள் முடங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மின்சார தடைக்கான காரணங்கள் இதுவரை வெளியாகவில்லை.

இதன் காரணமாக விமான நிலையம் முழுவதும் கணனி சேவைகள், தொலைத் தொடர்பு மற்றும் இணைய சேவைகள் முடங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நிலையான சமாதானத்தை நாம் ஏற்படுத்த வேண்டும்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட லக்ஷ்மன் செனவிரத்ன தனது கடமைகளை உத்தியோபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட வைபவத்தின் போது, சமய வழிபாடுகளுக்கு மத்தியில் மகா சங்க நாயக்கர்களின் ஆசீர்வாதத்துடன் உத்தியோகபூர்வ ஆவணங்களில் கையொப்பமிட்டு இராஜாங்க அமைச்சர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உரையாற்றுகையில், நாட்டில் இறையாண்மையை பாதுகாக்கும் வகையில் சேவையாற்றும் முப்படையினர் மற்றும் பொலிஸ்துறையினர் ஆகியோருக்கு நன்றியை தெரிவிப்பதாகவும், மக்கள் மத்தியில் நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நாம் செயற்படவேண்டும் எனவும் நாட்டின் நலன்கருதி அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில், பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுனில் சமரவீர உள்ளிட்ட பிரமுகர்கள், அமைச்சரின் குடும்ப உறுப்பினர்கள், பாதுகாப்பு படைகளின் பிரதானி, முப்படை தளபதிகள், பொலிஸ்மா அதிபர் மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1551

Search for people, places and things

## பரணி

தன் உடலுக்கும் மனதிற்கும் மரியாதை கொடுக்கத் தெரியாதவன்



இன்னொரு மனிதரிடமிருந்து மரியாதையை எதிர்பார்ப்பது தவறாகும்!

## முரளி

தனிமையில் அழுவது கூட வலிக்கவில்லை. ஆனால் வலிக்கிறது பிறர் முன் சிரிப்பது போல் நான் நடிப்பது



## ராஜ்

பிடித்த ஆணுடன் மனதுக்குள்ளே பேசி வாழ்பவள் பெண்



பிடித்த பெண்ணுடன் மனம்விட்டுப்பேச ஆசைப்படுபவன் ஆண்....!

## சுபா

கெட்டவனுக்குக்கூட நன்மைசெய்... அது தப்பல்ல



நல்லவனுக்கு மட்டும் கெடுதல் செய்யாதே அது தர்மமல்ல

## செல்வி

தன் நல்லொழுக்கங்களால் தனது பெற்றோரை மகிழ்விப்பவனே



பெற்றோர்களின் பிறவிப் பலனைப் பூர்த்தி செய்தவன்

## வருண்

அடுத்தவனுக்குப் பயந்தவன் ஆயுதத்தைக் கண்டுபிடித்தான்



தனக்குத்தானே பயந்தவன் கடவுளைக் கண்டுபிடித்தான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மகிந்த-மைத்திரி தலைமையிலான புதிய அரசுடன் இணையமாட்டோம்

## ரவூப் ஹக்கீம் திட்டவட்டம்



(கொழும்பு)

மைத்திரி - மகிந்த தலைமையிலான புதிய அரசாங்கத்துடன் தாம் இணையவுள்ளதாக பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம கூறியுள்ள கருத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மறுத்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு உலமாக்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம, புதிய அரசாங்கத்தில் ஐக்கிய தேசிய முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணையவுள்ளனர் என்று கூறியிருந்தார்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் மைத்திரி- மகிந்த தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே ரவூப் ஹக்கீம், இவரது இந்தக் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை எந்த விதமான தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சட்டவிரோதமாக பாராளுமன்றத்தை கூட்ட முயன்றால் சபாநாயகர் மாற்றம்

## முன்னாள் அமைச்சர் சுசில் எச்சரிக்கை

(கொழும்பு)

சட்ட விரோதமாக பாராளுமன்றத்தை கூட்ட முற்பட்டால் புதிய சபாநாயகர் ஒருவரை நியமிக்க நேரிடும் என முன்னாள் அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த எம்.பி எச்சரித்துள்ளார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி 120 எம்.பிக்களின் ஆதரவுடன் பாராளுமன்றம் வர இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பல இலட்சம் மக்கள் கொழும்பில் ஒன்று கூடியுள்ளனர். 48 மணி நேரத்தில் வெளியேறுமாறு ரணிலுக்கும் சபாநாயகருக்கும் கூறுகிறோம்.

பழைய ஆவணமொன்றை வைத்துக் கொண்டு சபாநாயகர் பாராளுமன்றத்தைக் கூட்டத் தயாராகிறார். பாராளுமன்றத்தைக் கூட்டும் அதிகாரம் ஜனாதிபதிக்குத்தான் இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# பிரதமர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி என்னிடம் கோரினார்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னை பிரதமராக்குவதற்கு முன்வந்தது உண்மை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் கொள்கை அடிப்படையில் மைத்திரிபால சிறிசேனவின் இந்த வேண்டுகோளை நான் நிராகரித்தேன். நான் ரணில் விக்கிரமசிங்கவிற்கு பயந்து இதனை நிராகரிக்கவில்லை.

மாறாக பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வது கொள்கை அடிப்படையில் சிறந்த விடயமல்ல என நான் கருதினேன் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்படவேண்டும் என்பதே அவ்வேளை எனது நோக்கமாகயிருந்தது எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பேரணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் சஜித் பிரேமதாஸவிற்கும் கரு ஜெயசூரியவிற்கும் பிரதமர் பதவியை வழங்க முன் வந்ததாகவும் எனினும் இருவரும் ரணில் விக்கிரமசிங்க மீதான அச்சம் காரணமாக அதனை ஏற்க மறுத்தனர் எனக் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையிலேயே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 220 | 250 | 220 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 140 | 110 | 160 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 200 | 140 | 200 |
| தக்காளி | 350 | 300 | 280 | 150 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 30 | 60 |
| கோவா | 160 | 160 | 150 | 150 | 200 |
| கரட் | 180 | 280 | 200 | 140 | 400 |
| பூசணி | 80 | 50 | 50 | 40 | 80 |
| புடோல் | 160 | 150 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 140 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 100 | 140 |
| பாகற்காய் | 350 | 300 | 350 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 150 | 150 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 400 | 350 | 300 | 400 | 400 |
| லீக்ஸ் | 180 | 140 | 160 | 90 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 120 | 60 | 160 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 280 | 120 | 110 | 200 |
| போஞ்சி | 300 | 300 | 280 | 200 | 320 |
| கத்தரித்தம்புள்ள | 300 | 200 | 200 | 200 | 240 |
| கீரை - 1பிடி | 60 | 70 | 40 | 30 | 70 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 180 | 250 | — | 300 |
| வெங்காயப்பூ | 350 | — | — | 120 | — |
| முள்ளங்கி | 80 | 100 | — | 40 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 40 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | 60 | 120 | 120 |

# செய்தித்துளிகள்

## காணிப் பிரச்சினையால் தந்தை அடித்துக் கொலை

(கொழும்பு)

வாரியாபொல, கொஸ்வத்தாபிடிய பிரதேசத்தில் நபர் ஒருவரால் அவரின் தந்தை கொலை செய்யப்பட்டுள்ளார். பொல்லால் தாக்கி அவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொஸ்வத்தாபிடிய மலகனே பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காணிப் பிரச்சினை ஒன்று காரணமாக இந்தக் கொலை நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. கொலைச் சந்தேகநபரான மகன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், வாரியாபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

## இரண்டு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு!

(பத்தனை)

பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குயின்ஸ் பெரி தோட்டத்திலுள்ள நீரோடையிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபர் 41 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தையென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லும் வழியில் பாலமொன்றை கடக்க முற்பட்ட போது தவறி வீழ்ந்து மரணம் நிகழ்ந்திருக்கலாமென பிரதேசவாசிகள் தெரிவித்தனர். (இ-7)

## நண்பனின் பிறந்தநாள் வீட்டிற்கு சென்ற மாணவன் நீரில் மூழ்கிப் பலி!

(குளியாப்பிட்டி)

நண்பனின் பிறந்தநாள் விழாவில் பங்கெடுக்கச் சென்ற பாடசாலை மாணவரொருவர் நேற்று முன்தினம் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குளியாப்பிட்டி, பன்னல, எலபெடகம பிரதேசத்தில் வசிக்கும் ஷானுக்க ஜெயசிங்க (வயது 18) என்ற மாணவனே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தன்னுடன் கல்வி பயிலும் நண்பனின் பிறந்த நாள் விழாவை கொண்டாடுவதற்காக, குளியாப்பிட்டி வல்பிட்டிகம பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றுக்குச் சென்றிருந்த வேளையில், அதனருகிலுள்ள ஆற்றில் நண்பர்கள் அனைவரும் இறங்கி நீராடிய வேளையில், குறித்த மாணவன் சேற்றில் புதையுண்டமையால் வெளியில் வரமுடியாமல் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் ஹோட்டல் ஊழியர்கள் பிரதேசவாசிகளின் உதவியுடன் குறித்த மாணவனின் சடலம் மீட்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## புதிய உறுப்பினர் நியமனம்




திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் சர்பில் புதிய உறுப்பினராக சண்முகம் பாலகணேசன் நேற்று நியமனம் செய்து வைக்கப்பட்டார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தலில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் அக்கடமையிலிருந்து விலகிக்கொண்ட நிலையில் அச்சபையில் ஏற்பட்டிருந்த வெற்றிடத்திற்கு கட்சியின் சார்பில் இன்னொருவரை நியமிக்க வேண்டியிருந்தது.

அதற்கமைவாக கட்சியின் நீண்டகால உறுப்பினரும், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு போட்டியிட்ட வேட்பாளருமான சண்முகம் பாலகணேசன் புதிய உறுப்பினராக கட்சியின் செயலாளர் நாயகமும் மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள்அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று நியமனம் செய்துவைத்தார். (இ-7)




# கலைமானும் கரடியும்



கலைமான் ஒன்று தன் இரண்டு குட்டிகளுடன் அடர்ந்த காட்டுக்குள் இரை தேடி அலைந்து கொண்டிருந்தது. மாலை நேரத்தில் இருப்பிடம் திரும்பும் வேளை வந்ததும், குட்டிகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டது.

அப்போது கலைமான் குட்டிகளில் ஒன்று காட்டுக்குள் வழி தவறி விட்டது. அந்தக் காட்டுக்குள் சிறிது தூரம் தன் தாயைத் தேடியது. ஆனால் தாயையும் உடன் பிறந்த மற்றொரு குட்டியையும் அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர் அது காட்டின் ஒரு ஓரமாக நின்று கண்களில் கண்ணீர் பொங்க அழுது கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அந்த வழியாக கரடிக் குட்டி ஒன்று அங்கு வந்தது. அது கலைமான் குட்டியிடம் எதற்காக அழுகிறாய் என்று கேட்டது.

கலைமான் குட்டியும் தன் சோகக் கதையைக் கூறியது. பரிதாபம் கொண்ட கரடிக்குட்டி, கலைமான் குட்டியைத் தன்னுடன் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றது.

இரண்டும் நண்பர்களாக இருந்து தங்களின் சிறு வயது காலத்தை கரடிக்குட்டியும் கலைமான் குட்டியும் சந்தோசமாகக் கழித்து வந்தன.

கலைமான் வளர வளர அதற்கு அழகிய கொம்பு முளைத்தது. அதன் காரணமாக அது பார்ப்பதற்கு மிகவும் அழகாகத் தோன்றியது. கலைமானைப் பார்த்த மற்ற விலங்குகள் அதன் அழகை பாராட்டிச் சென்றன. இதனால் கலைமானுக்குக் கர்வம் உண்டானது.

அது மற்ற எந்த விலங்குகளையும் மதிக்காமல், ஏளனமாகப் பார்க்கத் தொடங்கியது. ‘இதுனால் வரை தனக்கு அடைக்கலம் கொடுத்து, தன்னுடன் உயிருக்கு உயிராகப் பழகி வந்த கரடியிடமும் அது தன் அழகின் கர்வத்தைக் காட்ட ஆரம்பித்தது.

கரடியே! நீ என்னைப் போல் அழகாக இல்லை. உன் முகத்தைப் பார்க்கவே அசிங்கமாக இருக்கிறது. ஆனால் என்னைப் பார், இயற்கையிலேயே அழகான எனக்கு, இப்போது வளர்ந்துள்ள கொம்புகள் மேலும் அழகு சேர்க்கின்றன. இப்போது உன்னை என் நண்பன் என்று சொல்லிக்கொள்ளவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. எனக்கு நண்பனாக இருக்க, என்னைப் போல் அழகு படைத்தவரே தகுதியானவர். உனக்கு அந்தத் தகுதி கொஞ்சமும் இல்லை, என்றது கலைமான்.

இதைக்கேட்ட கரடிக்கு முதலில் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதனை வெளியே காட்டிக் கொள்ளாமல் ‘கலைமானே! உனக்கு உன் கொம்புகள் மிகுந்த அழகுதான். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அது மட்டுமல்லாது, என் நண்பன் மிகவும் அழகானவன் என்பதும் எனக்கும் தானே பெருமை! என்றது பெருந்தன்மையுடன்.

ஆனால், உன்னை என் நண்பன் என்று சொல்லிக் கொள்வது எனக்கு அசிங்கமாக இருக்கிறது. நான் தனியாக வாழ முடிவு செய்துவிட்டேன் என்று கூறியபடி கலைமான் அங்கிருந்து புறப்பட்டுப் போய் விட்டது.

இது நாள் வரை தன்னோடு ஒற்றுமையாக வாழ்ந்த மான், பிரிந்து போவதைக் கண்டு வேதனையில் துடித்தது கரடி. இருப்பினும் மனதைத் தேற்றிக் கொண்டது.

ஒரு நாள் கலைமான், இரை தேடுவதற்காக வெளியில் சென்றது. அப்போது மரம் ஒன்றில் இருந்த சிறுத்தை கலைமானை வேட்டையாடத் துரத்தியது.


சிறுத்தைக்குப் பயந்து தலைதெறிக்க ஓடிய கலைமானின் தலை ஒரு மரத்தின் கிளைகளுக்கு இடையில் வசமாக மாட்டிக் கொண்டது. எவ்வளவு முயன்றும் அதன் தலை வெளியே வரவில்லை. தன் முழு பலத்தினைக் கொண்டு கலைமான் தலையை வெளியே எடுக்க முயன்றது. இறுதியில் அதன் கொம்புகள் முறிந்து தலை வெளியே வந்தது.

கொம்புகள் ஒடிந்து போனதால் கலைமான் பார்ப்பதற்கே அசிங்கமாக தோற்றம் அழிந்தது. இதைப் பார்த்த மற்ற விலங்குகள் கேலிபேசிச் சிரித்தன. கலைமான் அழகிழந்து பழைய படி கரடியிடமே சென்றது. கரடியோ, கலைமானுக்கு நடந்ததைக் கேட்டு வருந்தியது. மானே! அழகு என்பது எப்போதும் நம்முடன் இருக்கப்போகிற சொத்தில்லை.

வயதாக வயதாக அது நம்மை விட்டு விலகுவது உறுதி. உனக்குக் கொஞ்சம் விரைவாகப் போய் விட்டது. இதற்காக வருந்தாதே என்று கலைமானைத் தேற்றியது கரடி. கரடியின் பெருந்தன்மையைக் கண்டு வெட்கத்தில் தலை குனிந்த கலைமான், அதனிடம் மன்னிப்புக் கேட்டது.

இருவரும் பழையபடி நண்பர்களாக வாழத் தொடங்கினர்.

# சிட்டுக்குருவி



பட்டுச் சிறகைப் பலமாய் ஆட்டிப்
பறந்து வருகின்ற
சிட்டுக் குருவி சினமேன் உனக்கு?
சீக்கிரம் நீ சொல்லு!

குட்டி அலகும் குறுகுறு கண்ணும்
கொண்டோர் கிளையமரும்
சிட்டுக் குருவி! சினமேன் உனக்கு?
சீக்கிரம் நீ சொல்லு!

கொட்டை பிரித்துக் குட்டிப் பழத்தைக்
கொத்தித் தின்கின்ற
சிட்டுக் குருவி! சினமேன் உனக்கு?
சீக்கிரம் நீ சொல்லு!

நெட்டை மரத்தின் நிழலில் ஒருநாள்
நின்றேன் இளைப்பாற!
சிட்டுக் குருவி! சினமேன் உனக்கு?
சீக்கிரம் நீ சொல்லு!

## பொது அறிவு துணுக்குகள்

- பல்பில் உள்ள டங்ஸ்டன் இழை, சுமார் 3400 டிகிரி செல்சியஸ் வரை வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் பெற்றது.
- வானிலை இயல் (Meteorology) என்பது வளிமண்டலமும் அதன் மழை தட்பவெப்பம் காற்றோட்டம் தொடர்பான பண்புகள் பற்றிய அறிவியல்
- சிங்கப்பூரின் முந்தைய பெயர், டெமாஸெக்.
- பிரபல இசைமேதையான பீத்தோவன், ஜேர்மனியில் உள்ள "பான்" நகரில் பிறந்தார்.
- சீனக்குடியரசின் தந்தை" என்று போற்றப்படுபவர், சன்யாட்சன்.
- ஒருசெல் உயிரியான அமீபாவின் உடல், புரோட்டோபிளாசத்தால் ஆனது.
- "விற்றமின் ஏ"-ன் வேதியியல் பெயர் ரெட்டினால்.
- சூரியக்குடும்பத்தைக் கண்டறிந்தவர், கோபர்நிக்கஸ்.
- சீனர்கள் தான் முறையான நெல் சாகுபடி முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள்.

அரசியல் பிழைத்தோர்க்கு
அறம் கூற்றாகும்.
– சிலப்பதிகாரம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலங்கை சீரழிவதை யாராலும் தடுக்க முடியாது

இந்த உலகில் இடம்பெறும் நிகழ்வுகள் விந்தை நிறைந்தவை. இப்பூமிப் பந்து தோற்றம் பெற்று ஜீவராசிகள் உற்பவமாகிய காலம் முதல் இறைவனுடைய திருவிளையாடல்களும் ஆரம்பமாகிவிட்டன.

இந்து சமயத்தின் தத்துவம் பஞ்ச கிருத்தியம் என்ற ஐந்தொழில் சார்ந்ததாகும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழிலை இறைவன் செய்கின்ற தத்துவம் குறித்தே ஆலய மகோற்சவ விளக்கம் அமைகிறது.

ஆக, ஐந்தொழிலைப் புரிகின்ற இறைவன் ஆன்மாக்களுக்கு முத்திப் பேரின்பம் கொடுக்கின்றான்.

முத்தியடையாத ஆன்மாக்கள் மீண்டும் பிறப்பெடுத்து கன்மவினைப் பயனை அனுபவித்து நிற்கின்றன.

இவ்வாறு ஆன்மாக்கள் முத்திப் பேரின்பம் அடைதல் என்பது பாவ, புண்ணியக் கருத்துக்களுடன் சம்பந்தப்பட்டவை.

அதாவது பிறவிப் பெருங்கடலை நீந்திப் பேரின்பம் எனும் இறை திருவடி நிழலை அடைகின்றது வரை ஆன்மாக்கள் பிறந்து பிறந்து உழன்று கொண்டிருக்கின்றன. உலகின் பிறப்புக்கள் என்பது தனித்து மானிடத்தை மட்டும் குறிப்பதன்று.

மாறாக மணிவாசகர் பெருமானார் உரைப்பது போல் புல்லாகி, பூடாகி, புழுவாகி, மரமாகி, பல் விருகமாகி, பறவையாய், பாம்பாய், கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லசுரராகி, முனிவராய், தேவராய் என ஏகப்பட்ட பிறப்புகளுக்கு ஆளாகின்றோம்.

இவையனைத்தும் அவரவர் செய்த வினைப் பயன் சார்ந்ததாகும். இவை உலகம் குறித்த சிறு குறிப்பு மட்டுமே. மேற்போந்த கருத்தை நாம் முன்வைப்பதன் நோக்கம் இந்த உலகில் எத்தனையோ இடங்கள் இல்லாது போயுள்ளன. எத்தனையோ விலங்குகள் முற்றாக அழிந்துள்ளன. இதுதான் என்றால், இன்னமும் இந்தப் பூமியில் நாம் கண்டறியாத அதிசயங்களும் அற்புதங்களும் ஏராளம் உள்ளன.

இவை ஒருபுறமிருக்க, இலங்கை நாட்டில் இப்போது நடக்கின்ற கூத்துக்களைப் பார்க்கும்போது இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று மார்தட்டியவர்கள் எல்லாவற்றையும் இழந்து சொந்த நாட்டில் அடிமைகளாக வாழுகின்ற நிலைமைக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றுபட்டு தேர்தல் களமிறங்கி இந்த நாட்டில் தேசிய அரசை உருவாக்கியவர்கள்.

இவ்வாறு ஒன்றுபட்டுக் களமிறங்கி சாதனை படைத்த இவர்களால் இன்னும் சில வருடங்களுக்கேனும் ஒற்றுமையாக இருக்க முடியவில்லை. இந்த ஒற்றுமையீனம் இப்போது நாட்டை என்ன பாடுபடுத்துகிறது என்பது தெரிகிறதல்லவா?

ஆம், தமிழ் மக்களைக் கொன்றொழித்தமை தொடர்பில் சர்வதேசத்தின் விசாரணையை ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் என்று கூறியவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

சரி, தமிழ் மக்கள் என்பதால் சர்வதேச விசாரணைக்கு அனுமதியில்லை என்பது சிங்கள அரசியல் தரப்பின் நிலைப்பாடு.

ஆனால் இன்று நிலைமை என்ன? இலங்கையில் ஆயுதமின்றி சர்வாதிகார ஆட்சி அரங்கேறுகிறது என்று இந்த நாட்டின் சபாநாயகர் உலக நாடுகளுக்கு அறிவிக்கின்றாரென்றால்,

இலங்கை பாவப்பட்டு விட்டது. தமிழ் மக்களைக் கொன்றொழித்த கொடுங்கோலின் வினைப்பயனை இலங்கை ஆட்சியாளர்கள் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை வந்து விட்டது என்பதுதான் உண்மை.

இந்த வினையை அவர்களே தமக்கு ஆக்கிக் கொள்வர். இனி இலங்கையில் நடப்பவை ஊழ்வினைப் பயனின் சூழ்வினை என்பதை உணர்தல் நன்று.

# வர்த்தமானிக்கு எதிராக செயற்படும் அதிகாரம் சபாநாயகருக்கு இல்லை

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக செயற்பட சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அதிகாரம் இல்லையென அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது புதிய அரசாங்கத்துகது இணங்கவே ஆசன ஒதுக்கீடு இடம்பெற்றிருக்கும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று (புதன்கிழமை) அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது சபாநாயகர் அண்மையில் வெளியிட்ட பிரதமர் தொடர்பான உத்தியோகபூர்வமான அறிவிப்பு தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த போதே அவர் மேற்குறித்தவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய பிரதமர் தொடர்பிலான முடிவை அரசியலமைப்புக்கு உட்பட்டே மேற்கொண்டுள்ளார். இதுதொடர்பில் வர்த்தமானி அறிவித்தலும் வெளிவந்து விட்டது.

வர்த்தமானி அறிவித்தலை கேள்விக்குட்படுத்தும் அதிகாரம் நாட்டில் எவருக்கும் கிடையாது. இதில் ஆட்சேபனைகள் இருப்பின் உச்சநீதிமன்றின் ஊடாகவே தீர்த்துக்கொள்ள வேண்டும்.

மாறாக ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு புறம்பாக சபாநாயகரினால் செயற்பட முடியாது.

எனவே, எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது கட்சி பேதம், அரசியல்பேதம் பாராது, அரசமைப்புக்கு உட்பட்டு சபாநாயகர் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றார்.

அரசமைப்புக்கு இணங்க நாட்டின் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்றும் நாடாளுமன்றின் அடுத்த அமர்வின் போது பழைய முறைப்படியே ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும் என்றும் சபாநாயகர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சர்வதேச நாடுகளின் கைப்பொம்மையாக சபாநாயகர் மாறிவிட்டார் – தயாசிறி ஜெயசேகர

சபாநாயகர் கரு ஜயசூரிய பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ள நேரங்களில் வெளிநாட்டு தூதுவர்களை சந்திப்பது பாராளுமன்ற விதிமுறைகளை முற்றிலும் மீறும் செயற்பாடாகும். ஜனநாயகம் பற்றி அதிகம் தெரிந்தவர் இவ்வாறு ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளினதும், அமைப்புகளினதும் கைப்பொம்மையாக சபாநாயகர் மாற்றப்பட்டு விட்டார் எனவும் அவர் சாடினார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

சபாநாயகர் மிகவும் நல்ல மனிதர், எம் அனைவரை விடவும் ஜனநாயக ரீதியில் செயற்படத் தெரிந்த மனிதர். அவர் மீது எமக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் உள்ளது.

எனினும் அண்மைக் காலமாக அவர் ஒரு சபாநாயகர் என்ற வரம்பை மீறி செயற்பட்டு வருகின்றமை முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அவரது அதிகாரங்களை சரியாக ஜனாதிபதி கையாண்டு வருகின்றார். அவ்வாறு இருக்கையில் இப்போது பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் சபாநாயகர் எந்தவித அரச முறை சந்திப்புக்களையும் முன்னெடுக்க முடியாது.

எனினும் அவர் வேறு நாட்டு தூதுவர்களை சந்தித்து இலங்கை குறித்து தவறான கருத்துக்களை முன்வைத்து வருகின்றார். இந்த சந்தர்ப்பங்களை சர்வதேச நாடுகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தி நாட்டில் நிரந்தர குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்க வாய்ப்புகள் உள்ளது.

ஆகவே சபா நாயகர் கரு ஜயசூரிய தனது கடமைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். (ம)

## கந்தசஷ்டி விரதம்

புலோலி அருள்மிகு வில்லிபாதி முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம் இன்று ஆரம்பமாகிறது.

தினமும் பிற்பகல் 4 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி விசேட பூஜை இடம்பெறும்.

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணியளவில் சூரசங்கார நிகழ்வும் புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

கந்தசஷ்டி விழாக்காலங்களில் கந்தபுராண படிப்பு (சூரபதுமன் வதைப்படலம்) இடம்பெறும். (ம-78)

## நோயற்ற வாழ்வே...

- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை அறிந்திடுங்கள்
- நோய் வந்தால் முதலில் மருந்து தேடுங்கள்
- தன் நோய்களைப் பற்றியே எப்போதும் சிந்திக்கவோ, கவலைப்படவோ கூடாது. தனக்கு வந்த நோய்களைப் பற்றி எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது
- நோய் 50 சதவீதம் என்றால் அதன் நினைவுகள் 50 சதவீதம் என்றும் உணர்ந்திடுங்கள். தனக்கு வந்த நோய் ஒன்றும் பெரிதல்ல என்று எளிதாக நினைத்திடுங்கள்
- மரணத்தைப் பற்றிய கவலைகளை அடியோடு மறந்திடுங்கள்
- தீராத நோய்க்கும் அன்பே அருமையான மருந்து
- கொடிய நோயை விரட்டும் சக்தி ஆறுதல் ஒன்றே என்பதை நினைவினில் கொள்ளுங்கள்

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்"

*–பிராங்க் லோயிட் ரைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)*



# சத்திய தரிசனம்

## இதயத்தில் இருக்கும் இறைவன்

❖ கடவுளிடம் "அதைக்கொடு, இதைக் கொடு" என்று கேட்க வேண்டியதில்லை. கிடைக்க வேண்டிய நேரத்தில் கிடைக்கும்."

❖ நல்ல செயல்களைச் செய்தால் ஆன்மிகப் பாதையில் மனம் திரும்புவதுடன் இறைவனின் அருளையும் பெறும் தகுதி ஏற்படும். முற்பிறவிப் பயன்கள் நம்மை வருத்தாது.

❖ நாக்கு ஓய்வு பெற்றால் மூளையின் சக்தி வலுப்பெறும். இந்த நேரத்தில் மனதை அலைபாய விடாமல், இறைவனை தியானிப்பது எளிது.

❖ உடம்பும் சிந்தனை சக்தியும் இருந்தால் மட்டும் போதாது. மனதைப் பக்குவப்படுத்திப் பண்படுத்தவும் தெரிய வேண்டும். அப்போது தான் இறைவனைக் காணமுடியும்.

❖ இறைவன் அனைவரின் உள்ளத்திலும் இருக்கிறார். கத்தி இருந்து உடம்பை அறுத்துவிட்டால் நோய் குணமாகிவிடாது. பயன்படுத்தும் தொழில்நுட்பம் தெரிய வேண்டும்.

❖ பிறரிடம் இறைவனைக் காண வேண்டிய நாம் மற்றவர்களை வெறுப்பதோ,

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில தட்டுவன்கொட்டி பிரதேசத்திலும் வவுனியா பிரதேசத்தில் தோணிக்கல் கிராமம், பொற்கோவில், நாவற்குளம், நாம்பன்குளம், மருதோடை, மலையா பருத்திக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டான் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

# போட்டியில் இந்தியா வென்றாலும் கௌரவத்தில் தோற்றுவிட்டது

## கம்பீர் கவலை





இந்தியா - மேற்கிந்திய தீவுகள் மோதிய முதலாவது இருபது - 20 போட்டியை முன்னாள் தலைவர் அசாருதீன் பெல் அடித்து ஆரம்பித்து வைத்தார்.

அசாருதீன் மீது சூதாட்ட புகார் கூறப்பட்டது. இதனால் அவருக்கு பி.சி.சி.ஐ. தடைவிதித்திருந்தது. இந்த வழக்கை எதிர்த்து நீதிமன்றத்தில் வெற்றி பெற்றார்.

அசாருதீன் பெல் அடித்து போட்டியை தொடங்கி வைத்ததற்கு முன்னாள் தொடக்க வீரர் கவுதம் கம்பீர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈடன் கார்டன் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது. ஆனால், சி.ஓ.ஏ. (கிரிக்கெட் நிர்வாகக்குழு) மற்றும் மேற்கு வங்காள கிரிக்கெட் சங்கம் தோல்வியடைந்து விட்டது. அவர் போட்டியை தொடங்கி வைத்தது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்று தெரிவித்துள்ளார். (க)

# மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் ரோகித் சர்மா படைத்த சாதனை

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இந்திய வீரர் ரோகித் சர்மா அதிரடியாக 111 ஓட்டங்கள் விளாசி, அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றார்.

அவர் 61 பந்துகளில் 7 சிக்சர்கள் மற்றும் 8 பவுண்டரிகளுடன் 111 ஓட்டங்கள் அடித்ததால், சர்வதேச இருபது-20 போட்டிகளில் 2203 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதன்மூலம் சர்வதேச அளவிலும் அதிக ஓட்டங்கள்எடுத்த 2ஆவது வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில், தற்போது வரை இருபது - 20 போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த முதல் 10 வீரர்கள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன. மார்டின் கப்தில் (நியூசிலாந்து) - 75 போட்டிகளில் 2271 ஓட்டங்கள், ரோகித் சர்மா (இந்தியா) - 86 போட்டிகளில் 2203 ஓட்டங்கள், சோயிப் மாலிக் (பாகிஸ்தான்) - 108 போட்டிகளில் 2190 ஓட்டங்கள், பிரண்டன் மெக்கல்லம் (நியூசிலாந்து) - 71 போட்டிகளில் 2140 ஓட்டங்கள், விராட் ஹோலி (இந்தியா) - 62 போட்டிகளில் 2102 ஓட்டங்கள், முகமது ஷஷாத் (ஆப்கானிஸ்தான்) - 65 போட்டிகளில் 1936 ஓட்டங்கள், முகமது ஹபீஸ் (பாகிஸ்தான்) - 89 போட்டிகளில் 1908 ஓட்டங்கள், திலகரத்னே தில்ஷன் (இலங்கை) - 80 போட்டிகளில் 1889 ஓட்டங்கள், ஜேபி டுமினி (தென்னாபிரிக்கா) - 78 போட்டிகளில் 1858 ஓட்டங்கள், டேவிட் வார்னர் (அவுஸ்திரேலியா) - 70 போட்டிகளில் 1792 ஓட்டங்கள். (க)

# எல்லா பந்தையும் அடிக்க முடியாது இளம் வீரருக்கு லாரா அறிவுரை



இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான முதல் இருபது-20 கிரிக்கெட் போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றது.

முதலாவது போட்டியில் முதலில் களம் இறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் 109 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. ஒருநாள் போட்டியில் அதிரடி காட் டிய இளம் வீரரான ஹெட்மையர் 7 பந்தில் 10 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார்.

மைதானத்தில் இறங்கியதும் அனைத்து பந்துகளையும் அடித்து விளையாட நினைக்கிறார். இந்நிலையில் "ஹெட்மையர் பொறுமை காக்க வேண்டும்.

அவராகவே கொஞ்சம் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதன்பின் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்" என்று லாரா தெரிவித்துள்ளார். (க)

# தொடர்ந்து தொடர் வெற்றி இந்திய அணி சாதனை



உள்நாடு, வெளிநாடு என 20 ஓவர் போட்டிகளில் தொடர்ந்து ஏழு தொடர்களில் வெற்றி பெற்று இந்தியா சாதனை படைத்துள்ளது.

இந்தியா- மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் நடைபெற்று வருகிறது.

முதல் போட்டியில் இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நிலையில், நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது போட்டியில் 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது.

இதன்மூலம் தொடர்ந்து ஏழு தொடர்களை வென்று இந்தியா புதிய சாதனை படைத்துள்ளது.

அதாவது நியூசிலாந்துடனான தொடரை 2-1 என்ற கணக்கிலும், இலங்கையுடனான தொடரை 3-0 என்ற கணக்கிலும், இலங்கையில் நடைபெற்ற நிதாஹாஸ் டிராபியையும், அயர்லாந்துடனான தொடரை 2-0 என்ற கணக்கிலும், இங்கிலாந்துடனான தொடரை 2:1 என்ற கணக்கிலும், மேற்கிந்திய தீவுகளுடனான தொடரை 2:0 எனவும் கைப்பற்றியே இச்சாதனையை இந்திய அணி படைத்துள்ளது. (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## சதுரங்கப் போட்டி

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் இளையோர்களுக்கான சதுரங்கப்போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே 07, 09, 11, 15, 17 ஆகிய வயதுப் பிரிவுகளில் போட்டி நடைபெறும்.

பாடசாலையூடாக விண்ணப்பிக்கத்தவறியோர் வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சமுகம் தந்து பதிவுகள் மேற்கொள்ள முடியும்.

வெள்ளி பிற்பகல் 3.30 மணிக்குப்பின்னர் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

போட்டியாளர்கள் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களை கொண்டுவருவது கட்டாயமானது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# ஒரு மைதானத்தில் நூறு விக்கெட்டுக்கள் ரங்கன ஹேரத் படைத்த புதிய சாதனை



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், ஜோ ரூட்டின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் இலங்கை வீரர் ரங்கன ஹேரத் புதிய சாதனை படைத்துள்ளார்.

இலங்கை-இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் காலி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது.

அந்த அணியின் ஜோ ரூட் 35 ஓட்டங்களில் இருந்தபோது, இலங்கை வீரர் ரங்கன ஹேரத் அவரை போல்டாக்கினார். இது காலி மைதானத்தில் ஹேரத் வீழ்த்தும் 100வது விக்கெட் ஆகும்.

இதன்மூலம், ஒரே மைதானத்தில் 100 விக்கெட்டுகள் கைப்பற்றிய 3வது வீரர் என்ற சாதனையை படைத்தார்.

இவருக்கு முன்னர் இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சன் லார்ட்ஸ் மைதானத்தில் நூறு விக்கெட்டுகளையும், இலங்கை ஜாம்பவான் முத்தையா முரளிதரன் கண்டி, அஸ்கிரியா, எஸ்.எஸ்.சி ஆகிய மூன்று மைதானங்களில் 100 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளனர்.

ரங்கன ஹேரத் இதுவரை 93 டெஸ்ட்களில் 431 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். மேலும், இந்த போட்டி அவருக்கு பிரியாவிடை டெஸ்ட் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (க)



## தமிழரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக

## விக்னேஸ்வரன் மாவைக்கு உத்தியோகபூர்வ

# விலகல் கடிதம் அனுப்பிவைப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிற்கு நேற்று தனது விலகல் கடிதத்தினை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தன்னை அரசியலுக்கு கொண்டு வந்ததற்கு நன்றி தெரிவித்திருக்கும் விக்னேஸ்வரன், தன்னை கட்சி உறுப்பினராகப் பார்க்காது தனக்கு எதிரான செயற்பாடுகளையே தமிழரசுக் கட்சி மேற்கொண்டிருந்ததாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆகையினால் தான் அக்கட்சியில் இருந்து உத்தியோகபூர்வமாக விலகிக்கொள்வதாகவும் அறிவித்திருக்கின்றார்.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பில் கட்சித்தலைவர் மாவை சேனாதிராசா கருத்துத் தெரிவிக்கையில், மாகாணசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் விக்னேஸ்வரன் போட்டியிட்டிருந்தார். அவர் தற்போது கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கின்றார்.

ஆனால் அவர் அண்மையில் ஒரு புதிய கட்சியொன்றையும் ஆரம்பித்திருந்தார். அவ்வாறு கட்சி ஆரம்பித்ததனூடாக அவர் தாமாகவே கட்சியிலிருந்து விலகியதாக கருதப்படுவார்.

அவ்வாறு புதியகட்சியை ஆரம்பித்த விக்னேஸ்வரன் மீதோ அல்லது அவருடைய செயற்பாடுகள் மீது எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஆகவே அவர் கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்து புதியகட்சியை ஆரம்பித்துள்ள நிலையில் அவர் தாமாகவே கட்சியிலிருந்து விலகிக்கொள்வதாகவும் மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார். (ம)

## யாழ் நகர் பகுதியில் குப்பை கொட்டுவோர் மீது நடவடிக்கை

# யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசூரிய எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரத்தில் சட்ட விரோதமாகக் குப்பைகள் கொட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசூரிய அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பான கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யாழ்ப்பாண நகரத்தின் பிரதான வீதிகளான ஸ்ரான்லி றோட், கே.கே.எஸ் வீதி மற்றும் பிரதான வீதி உட்பட பல்வேறு முக்கிய வீதிகளிலும் பொதுமக்களால் குப்பைகள் கொட்டப்படுவதை பொலிஸார் தடுக்கவேண்டும் என பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு பொதுமக்களினால் குப்பைகள் பொருத்தமில்லாத இடங்களில் கொட்டப்படுவதற்கு, கழிவகற்றல் செயன்முறை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப் படாமையே காரணம்.

எனவே யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேசசபை ஆகியன பொதுமக்கள் குப்பைகளைக் கொட்டுவதற்குப் பொருத்தமான இடங்களை உடனடியாக அடையாளப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு குப்பைகளைக் கொட்டுவதற்கு இடங்கள் அடையாளப்படுத்தப்பட்ட பின்னரும் பொதுமக்கள் வீதிகளில் குப்பைகளை கொட்டினால் பொலிஸார் உடனடியாக சட்டநடவடிக்கை எடுப்பார்கள்.

சட்டத்திற்கு புறம்பான வகையில் வர்த்தக நிலையங்களின் கழிவுகளை வெளியேற்றிய 37 வர்த்தகர்கள் மீது இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, வீதிகளில் குப்பைகளைக் கொட்டிய 7 பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-9)

## 14ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது

# மகிந்தவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு

## சபாநாயகர் திட்டவட்டமாக அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 14ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு எடுப்பது என சபாநாயகர் கருஜெயசூரிய தீர்மானித்துள்ளார்

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் சந்திப்பில் ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்பை



வெளியிட்ட போதிலும் சபாநாயகர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதி பாராளுமன்றத்தில் சம்பிரதாய அமர்வொன்று மாத்திரமே இடம் பெறவேண்டும் பாராளுமன்ற பாரம்பரியத்தினை பின்பற்றி அதனை அன்றைய தினம் ஒத்தி வைக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எனினும் அன்றையதினம் பாராளுமன்றத்தில் விவாதங்கள் எதனையும் மேற்கொள்ள முடியாது என்ற சட்டமெதுவும் இல்லை என ஐக்கியதேசிய கட்சியின் பிரதிநிதிகள் வாதிட்டுள்ளனர்.

இதேவேளை பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளை சட்டத்தின் கீழ் சபாநாயகரே அதன் நிகழ்ச்சி நிரலை தீர்மானிக்க வேண்டும் என ஏனைய கட்சிகள் தெரிவித்துள்ளன.

இதன் பின்னர் கருத்து தெரிவித்துள்ள சபாநாயகர் கருஜெயசூரிய 116 பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா தீர்மானமொன்றை சமர்ப்பித்துள்ளனர் 14ஆம் திகதி இதன் மீதான வாக்கெடுப்பு இடம் பெறும் என தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பெரும்பான்மையை உறுதிசெய்வதற்கான வாக்கெடுப்பை நடத்துவதற்காக தேவைப்பட்டால் நிலையியல் கட்டளைசட்டங்களை இடைநிறுத்த தயார் என சபாநாயகர் தெரிவித்துள்ளார். (ம)

# வடக்கில் அடைமழை இயல்பு நிலை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் நீடித்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் கடந்த ஒரு வாரத்திற்கும் அதிகமாக இயல்புக்கு மாறான காலநிலை காணப்படுகின்றது.

இந் நிலையில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உள்ளிட்ட பகுதிகளிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் நேற்று அடைமழை பெய்தது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்து காணப்பட்டதுடன் அரச திணைக்களங்களின் அன்றாடச் செயற்பாடு மற்றும் பல்வேறு தொழில்துறை சார்ந்த நடவடிக்கைகளிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக இதுவரை 499 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. முஹம்மத் றியாஸ் கூறியுள்ளார்.



அத்துடன் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 499 குடும்பங்களைச் சேர்ந்த 1706 பேர் இடம்பெயர்ந்து 5 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் ஊரியன்கட்டு, கட்டுமுறிவு, அம்பந்தாவெளி வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் நாசிவன் தீவு ஆகிய கிராமங்களிலிருந்தே மக்கள் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை வெள்ளம் காரணமாக கிரான் புலிபாய்ந்தகல் தரை வழிப் பாதை துண்டிக்கபட்டுள்ளதாகவும் கிரான் - தொப்பிகல பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியதால் ஐந்து கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1500 குடும்பங்களின் தரைவழிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, கிளிநொச்சியில் இரணைமடு குளத்தின் நீரின் அளவு உயர்ந்துள்ளமை காரணமாக வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வன்னியில் உள்ள அக்கராயன்குளம், முறிப்புக் குளம் முதலியவற்றின் நீர் நிலைகளும் உயர்ந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியில் நேற்று புதன் கிழமை ஆரம்பித்த அடை மழை தொடர்ந்து பெய்து வருகின்றமை காரணமாக வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்படலாம் என் மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07-11-2018
சீட்டிழுப்பு இலக்கம் 889
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
F 0 7 2 0 6 5

கொவிசெத
திகதி 2018.11.07
சீட்டிழுப்பு இலக்கம் 1936
R 19 46 68 72

தன நிதானய
திகதி 2018-11-07
சீட்டிழுப்பு இலக்கம் 72
B 05 12 50 66

மெகா பவர்
திகதி 07/11/2018
சீட்டிழுப்பு இலக்கம் 302
A 11 13 19 38 64

## ஜனாதிபதியின் விசேட உரை...

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

தற்போதுள்ள அரசியல் பிரச்சினைக்கு இன்னும் இரண்டு வாரங்களுக்குள் தீர்வு கிடைக்கும். அத்துடன் மக்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதை கடந்த 5 ஆம் திகதி காட்டியிருக்கின்றோம். இதனையும் மீறி செய்வதென்றால் பொதுத்தேர்தலொன்றுக்கே செல்ல வேண்டும். அதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

அத்துடன் தற்போதுள்ள நிலையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் பாராளுமன்றத்தை கலைக்கலாம். அவ்வாறில்லாவிட்டால் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலையால் ஏற்படும் பிரச்சினையை கருத்திற்கொண்டு ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைக்கலாம் என்றார். (ம)

## பஸ் கட்டணம்...

வரும் வகையில் இந்த மாற்றம் செய்யப்படுவதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

டீசலின் விலை குறைக்கப்பட்டதையடுத்து பேருந்து கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் நேற்று கூடி ஆராய்ந்தது. அதன் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை, ஆகக் குறைந்த கட்டணமான 12 ரூபாயில் மாற்றமில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# புதிய அரசில் இணையுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது

## – ஹிருணிகா

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு அச்சுறுத்தும் பல அழைப்புக்கள் எனக்கு கிடைத்தன. அதில் பலவற்றை மக்கள் முன்னிலையில் வெளிப்படுத்தினால் பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதகுருமார்களின் சுயரூபங்கள் வெளியாகும். இருப்பினும் அதனை நான் செய்யப்போவதில்லை என ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து




தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புதிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு அச்சுறுத்தும் பல் அழைப்புக்கள் தனக்கு கிடைத்தன என்றும் அமைச்சரவையில் இணைந்து கொள்ளாவிட்டால் தனது அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வரும் எனஅழைப்பை ஏற்படுத்திய வெளிநாட்டுநபர் தனக்கு எச்சரிக்கை விடுத்ததாகவும் அவர் கூறினார்.

இருப்பினும் தனது மாமியார் அழைப்பினை ஏற்படுத்திய நபரிடம் எந்தவொரு துறையையும் அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று உறுதியாக கூறியதாகவும் இதன் பின்னரே தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் புதிய அரசாங்கத்தில் இருந்து பல்வேறு அழைப்புக்கள் தமக்கு கிடைத்தன என்றும் அதனை மக்கள் மத்தியில் சுட்டிக்காட்ட விரும்பவில்லை என்றும் ஹிருணிகா தெரிவித்தார்.

மேலும் இந்த விடயங்களை வெளியிடுவதால் பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதகுருமார்களின் சுயரூபங்கள் வெளியாகும் என்பதாலேயே அவற்றை வெளியிடவில்லை எனவும் அவர் மேலும் கூறினார். (ம)

## பிரதேச செயல...

நேற்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது

பிரதேச செயலகத்திற்கு வருகைதந்த நபர் ஒருவர் பிறப்பு அத்தாட்சி பத்திரம் பெறும் பகுதிக்கு சென்று தர்க்கப்பட்டதாகவும் பின்னர் அங்குள்ள சிற்றூழியரை தாக்கியதாகவும் அவரின் கைவிரலை கடித்ததாகவும் நெல்லியடி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அந் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கை விரலில் காயமடைந்த சிற்றூழியர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-60)

## அரசியல் சூழ்நிலையை சுமுக...

ளார்கள்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் ஜனாதிபதியுடன், தமிழ்த் தேசியகூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், ஆகியோர் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த சந்திப்பு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை தொடர்பில் மிகநீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதி சிலமுடிவுகள் எடுக்கப்பட்டதன் பின்னணி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினருக்கு விளக்கமளித்தார்.

இதன்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பினாலும் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கான காரணங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறினார்கள்.

இத்தீர்மானங்கள் ஏற்கெனவே பகிரங்கமாக முழுநாட்டிற்கும் உலகிற்கும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. தாம் ஏற்கெனவே எடுத்த தீர்மானங்களை மாற்ற முடியாது என்றும் அத் தீர்மானங்களின்படியே தாம் செயற்படுவோம் என்றும் விளக்கி கூறினார்கள்

அனைத்து கட்சிகளினுடைய இணக்கப்பாட்டோடு நாட்டின் அரசியல் சூழ்நிலையை சுமுக நிலைக்கு கொண்டுவருவதற்காக எதிர்காலத்தில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அவரோடு கலந்தாலோசித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முழுமையான ஆதரவை கொடுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழு ஜனாதிபதிக்குஉறுதியளித்தார்கள்.

தற்போது யோசித் துள்ள திகதிக்கு முன்னதான ஒரு திகதியில் பாராளுமன்றம் கூட்டப்படவேண்டுமென்று ஜனாதிபதிக்கு கூட்டமைப்பு வலியுறுத்தியது.

இவ்வேண்டு கோளை தான் கவனமாக ஆராய்வதாக ஜனாதிபதி உறுதியளித்தார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## பாராளுமன்றம் கலைப்பு...

ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது வருமாறு, பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு தயாராகுவதாக உண்மைக்கு புறம்பான பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு தற்பொழுது சில திட்டமிட்ட குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரி விக்கப்படுகின்றது.

இருப்பினும் உண்மைக்கு புறம்பான மற்றும் அடிப்படையற்ற இந்த பிரசாரத்தை முற்றிலும் நிராகரிப்பதாக அரசாங்கம் இதன் மூலம் அறிவுறுத்துகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## நாடாளுமன்றம்....

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் அடிப்படையில் நாடாளுமன்றின் முதலாவது அமர்விலிருந்து 4 ஆண்டுகளும் 6 மாதங்களும் கடந்த பின்னரே ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைக்க முடியும்.

அதனடிப்படையில் நடப்பு நாடாளுமன்றை 2020ஆம் ஆண்டு மார்ச் மாதமே ஜனாதிபதி கலைக்க முடியும்.

எனினும் நாட்டில் தற்போது ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலையைக் காரணம் காட்டி நாடாளுமன்றை கலைக்கும் தீர்மானத்தை ஜனாதிபதி எடுத் துள்ளார் என்ற செய்தி தீயாகப் பரவுவதால் கொழும்பு அரசியலில் உச்சக்கட்ட பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தை உரிய காலத்திற்கு முன்னரே கலைக்க திட்டமிட்டுள்ளார்.

இந்தச் செயலானது அரசியலமைப்பு மீறலாகும் என்று தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா, இந்நிகழ்வானது இன்றே நடைமுறைப்படுத்தக்கூடும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## சர்வதேச தலை...

கொண்டு வருகின்றோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அரசியல் குழப்ப நிலை தொடர்பாக கூட்டமைப்பின் நிலை எவ்வாறு உள்ளது எனக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடந்துகொண்டிருக்கும் விதமானது அரசியல் அமைப்புக்கு மட்டுமன்றி ஜனநாயகத்துக்கும் விரோதமானது என்று உள். நாட்டில் மட்டுமன்றி சகல வல்லரசு நாடுகளும் கூறுகின்றன. மேலும் எவரும் இதற்கு ஆதரவாக கருத்துக்கள் கூறாது கண்டனங்களையே தெரிவித்து வருகின்றனர். இந்த நாட்டில் ஜனநாயக ரீதியில் அரசியல் அமைப்பு ரீதியாக ஆட்சி மாற்றங்கள் நடைபெறவேண்டும்.

இத்தகைய நிலை நீடிக்குமாயின் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு வழங்குகின்ற நிதிகள் கடன் வசதிகள் பல திட்டங்கள் தொடர்பில் இறுக்கமான நடைமுறையைப் பின்பற்றவுள்ளதாகத் தெரிவிப்பதுடன் மேலதிகமான திட்டங்கள் அல்லது உதவிகளை செய்யமாட்டோம் என்று வலியுறுத்தி வருகின்றார்கள்.

இன்று ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைகள் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வுவிடயத்தில் குறிப்பாக இனத்தின் விடுதலை இனப் பாதுகாப்பு போன்றவற்றுக்கு சிக்கலான நிலையே உருவாகியுள்ளது.

தேசிய அரசாங்கம் அமைந்த போது ஒரு அரசியல் அமைப்புக்கான விடயங்கள் முன்னகர்த்தப்பட்டு வந்தன. காணிகள் ஓரளவுக்கு விடுவிக்கப்பட்டு வந்தன. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளிநாட்டு நிதிமூலம் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இன்று அரசியல் குழப்பம் ஏற்பட்டதனால் இந்த நடவடிக்கைகள் தொடருமா என்ற கேள்வி எழுந்துள்ளது என்றார். (ம)

## நாடாளு...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்துகின்றோம்.

மேலும் தாமதித்தால் இலங்கை மீதான சர்வதேசத்தின் மதிப்பைக் குறைக்கிறது. அத்துடன் நல்லாட்சி, உறுதிப்பாடு மற்றும் செழிப்பு ஆகிய மக்களின் வேணவாக்களும் பாதிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார். (ம)

## தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க...

தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பு குறித்து ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில்,

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், கடந்த சில தினங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கான காரணங்களையும் அதன் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைக்கவுள்ள நன்மைகள் குறித்தும் ஜனாதிபதி விளக்கினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமது அரசியல் நிலைப்பாடு குறித்து ஜனாதிபதியுடன் விரிவாக கலந்துரையாடினர்.

இலங்கையில் தமிழ் மக்களை பாதிக்கின்ற பிரச்சினைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இந்த பிரச்சினைகளை தீர்ப்பது குறித்து தாம் உடனடியாக கவனம் செலுத்துவதாகவும் ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியின் நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தியதுடன், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிலும் மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதிலும் இரு தரப்பினரும் ஒத்துழைப்புடனும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## வடக்கு பகுதியில்...

அத்துடன், காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோ மீற்றராக அதிகரிக்கும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

காற்றழுத்த தாழமுக்கம் இலங்கையின் மேற்குக் கரையோரம் நெருங்கியுள்ளதால் வடக்கு, கிழக்கு வடமத்திய, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகும். காற்றின் வேகமும் மணிக்கு 50 கிலோ மீற்றராக அதிகரிக்கும்.

அதனால் மீனவர் கடலுக்குச் செல்வதை வரும் சில தினங்களுக்கு தவிர்க்கவேண்டும் என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## கிளிநொச்சி அறிவியல் நகரில்...

கிளிநொச்சியில் அபாயகரமான வெடிபொருட்கள் மீட்கப்பட்டு உள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி அறிவியல்நகர்ப்பகுதியிலேயே நேற்று புதன்கிழமை குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அறிவியல் நகர் பகுதி யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வெடிபொருட்கள் அகற்றப்பட்டு பாது காப்பான பகுதியாக மீளக் கை யளிக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த பகுதியில் யாழ்.பல்கலைக்கழக வளாகம் இயங்கி வருகின்றது. தற்போது குறித்த பகுதியில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வரும் நிலையில் அதற்காக நிலத்தினைத் தோண்டிய போது குறித்த அபாயகரமான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து தற்போது குறித்த கட்டடப்பணிகள் இடைநிறுத்தப்பட்டு உள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-4271)
UK– 550 /=Kg
கனடா–900 /=Kg
ஜேர்மனி– 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.